# புதியபூமி

PUTHIYA POOMI வெகுஜன எழுச்சி இதழ்

சுற்று 2 | 1986 கார்த்திகை | விலை ரூபா 2-50 | சுழற்சி 8


## முன்னாள் நீதியரசர் இப்படிச் சொல்கிறார்

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்த அரசு ஒரு நாளைக்கு இரண்டு கோடி ரூபா செலவு செய்கிறது. இந்தப் பணம் சாதாரண சிங்கள தமிழ் தொழிலாளர் விவசாயிகளுடையதே. பயங்கரவாத ஒழிப்பு என்ற நடவடிக்கையால் நாளாந்தம் கொல்லப்படுபவர்கள் சாதாரண தமிழ்த் தொழிலாள விவசாயிகளேயாவர். இதனால் விரக்தியுற்றுள்ள தமிழர்கள் பிரிவினை என்ற

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கை தாக்க ராணுவத் தயாரிப்பு

# தடுத்து நிறுத்த வழி என்ன?

வடபகுதியில் குறிப்பாக யாழ் - குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது என்ற பெயரில் பாரிய ராணுவத் தாக்குதல் ஒன்றுக்கு அரசு தயாராகி உள்ளது. அவ்வாறான தாக்குதல் தொடுக்கப்பட்டால் அழிவின் அனர்த்தம் அளவிடமுடியாத ஒன்றாகவே இருக்கும். ஆதலால் அதைத் தடுத்து நிறுத்தச் சரியான உபாயமும் வழிவகைகளும் தேடப்படுவது அவசியமாகும்.

இப்பொழுது வரும் செய்திகள் யாவும் குடாநாட்டிற்குள் இடம்பெறஇருக்கும் ராணுவத் தாக்குதலைக் குறித்தனவாகவே உள்ளன. பயிற்சிகளில் முதிர்ச்சி பெற்றதும் - கொடூரத் தாக்குதல்களுக்குத் தயாரானதுமான படைப் பிரிவுகளைச் சேர்ந்த ராணுவத்தினரும், கறுப்புச் சட்டைக்காரர்களும் வடபகுதி ராணுவ முகாம்களை நிரப்பி வருகின்றனர். அவர்களுடன் இஸ்ரேலிய ஆலோசகர்கள், ஏனைய கூலிப்படையினர் போன்றவர்களும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதற்கு இசைவாக ராணுவப் பொறுப்பதிகாரிகளும் மாற்றப்பட்டு வருகின்றனர். இவற்றுடன் நவீன யுத்த தளபாடங்களும், ஆங்காங்கே சிறு சிறு முகாம்களை நிறுவக்கூடிய சாதனங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன் கடல் ஆகாயத் தாக்குதல்களுக்கும் தயார்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

மேற்கூறியவற்றை உறுதிப்படுத்துவதுபோல் தனது அமெரிக்க விஜயத்திற்கு முன் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி வெளியிட்ட கருத்துக்கள் அமைந்துள்ளன. ராணுவத் தீர்வுதான் ஒரே வழி என்றும், ஆயுதப் படைகள் அதற்குத் தயாராக உள்ளனவென்றும், ஒரு மணி நேரத்திற்குள் அரச படைகள் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துவிடும் என்றும் கூறியுள்ளார். தனது மேற்படி கூற்றுக்களுக்குத் தம்மால் மேற்கொள்ளப்படும் அமெரிக்க விஜயம் பயன்தர இருப்பதாகவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அப்படியாயின் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டுவிட்டது என்றே கொள்ளவேண்டியுள்ளது.

இவற்றுடன் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட பெரிய அளவிலான தாக்குதல்களும், அதற்கு முன்பு மன்னாரில் இடம்பெற்ற சம்பவங்களும், இப்பொழுது கிழக்கில் நடந்துகொண்டிருப்பவையும் குடாநாட்டுத் தாக்குதல்களுக்கு பச்சைவிளக்கு காட்டி நிற்கின்றன.

அவ்வாறான பெரும் தாக்குதல் ஒன்று குடாநாட்டிற்குள் தொடுக்கப்பட்டால் அதன் விளைவு பாரிய அழிவாகவே இருக்கும். ஏனெனில் குடாநாட்டின்மீது அரசுக்கும் அதன் ஆயுதப்படைகளுக்கும் இருக்கும் வன்மம் மிக அதிகமானதாகும். தமது முழு வெறித்தனத்தையும் அவ் அரக்கப் படைகள் வெளிக்காட்டும் என்பதில் ஐயம் இல்லை. அத்தகைய மூர்க்கத்தனத் தாக்குதல்களுக்கும், கொடூர கொலை வெறித் தாண்டவத்துக்கும் எதிர்த்து முகம் கொடுத்து முறியடிக்கக்கூடிய சூழ்நிலை வடக்கில் நிலவுகிறதா என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதொன்றாகும். இளைஞர் இயக்கங்களிடையே காணப்படும் தீர்க்கமுடியாத முரண்பாடுகளும், மோதல்களும், ஆளை ஆள் அடித்துக்கொள்ள முனையும் போக்குகளும் அரசுக்கு எதிரான எதிர்நிலை சக்திகளின் ஒருமுகத் தன்மையைச் சிதறடித்திருப்பதையே காணமுடிகிறது. இது அரசியல் - யுத்த தந்திர ரீதியில் எதிரிக்குப் பலமானதும், போராடும் சக்திகளுக்கு - மக்களுக்கு பாதகமானதுமாகவே காணப்படுகின்றது. அதேவேளை மக்கள் பார்வையாளர்களாக மட்டு

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ் முஸ்லீம் கலவரங்கள்

## எதிர்காலத்திற்கு ஓர் எச்சரிக்கை

கிழக்கிலங்கையில் அடிக்கடி தமிழ் முஸ்லீம் மக்களிடையே கலவரங்கள் தூண்டிவிடப்படுகின்றன. இவை தற்செயலானவை அல்ல. நன்கு திட்டமிடப்பட்டு உரிய வேளைகளில் அவை நிகழ்த்தப்படுகின்றன. தமிழ் முஸ்லீம் மக்களிடையிலான நீண்டகால ஒற்றுமையைக் குலைத்து குரோதத்தை வளர்த்து அவர்களை நிரந்தரப் பகையாளியாக்குவதன் மூலம் தமது எதிர்காலப் பேரினவாத நோக்கங்களை ஈடேற்ற அரசு முயன்று வருகின்றது.

மேற்படி அரசின் நோக்கங்களை செயல்படுத்துவதற்கு கிடைத்த ஒரு அமைப்பே ஊர்காவல் படையாகும். இந்த ஊர்காவல் படையில் சேர்த்துக்கொள்ளப்படும் குண்டர்கள் மூலமே அடிக்கடி தமிழ் முஸ்லீம் கலவரங்கள் நடைபெறுகின்றன. ஊர்காவல் படையில் சேர்ந்த முஸ்லீம்கள் தமிழர்கள் மத்தியில் ஆயுத நடவடிக்கையில் இறங்குவதும், இளைஞர் இயக்கங்கள் முஸ்லீம் மக்கள் மத்தியில் சமூக

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகள் நியாயமானவை

யாழ் - பல்கலைக் கழக மாணவன் அ. விஜிதரன் மர்மமான முறையில் காணாமல் போய்விட்ட சம்பவம் விசனத்திற்குரியது. காணவில்லைத்தானே பரவாய் இல்லை, போனால் போகட்டும் போடா என்று இருக்க முடியுமா? விஜிதரன் ஒரு தமிழ் மாணவன். மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர் ஒரு தந்தை - தாயால் பெற்றெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர். நான்கு சகோதரிகளுக்கு சகோதரன். நண்பர்களுக்கு நண்பன். யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவன். ஏனைய மாணவர்களின் சக மாணவன். தமிழர் சமுதாயத்தின் இளம் தலைமுறையினரில் அவனும் ஒருவன். அப்படியாயின் போனால் போகட்டும் என்று இருக்க முடியுமா? அதனால் சக மாணவர்கள் விஜிதரனைப்பற்றி அக்கறைப்படுவது, தேடுவது அல்லது அதற்காக இயக்கம் நடத்துவது தவறல்ல. இவ்விடயத்தில் இயக்க முரண்பாடுகளுக்கோ போட்டி பூசல்களுக்கோ இடம் இருக்க முடியாது. பிரதானமானது விஜிதரன் கண்டுபிடிக்கப்படுவதேயாகும். இதில் அனைத்து இயக்கங்களும் பொது ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

இதை விடுத்து விஜிதரனுக்காகக் குரல் கொடுத்து வரும் சக மாணவர்களின் குரலை நெரிக்க முற்படுவது அநாகரிகமானதாகும். ஜனநாயகம், சுதந்திரம் மனித உரிமைகள் பற்றி ஜே. ஆர். அரசுடன் போராடிக்கொண்டு வரும் தமிழ் மக்கள் தம்மிடையே அவை மறுக்கப்படுவது கண்டு வேதனையும் வெட்கமுமே அடைகிறார்கள். அண்மையில் மட்டுவிலில் பாதயாத்திரை சென்ற யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் படுகாயமடைந்த ஒரு மாணவனின் நிலை மோசமாகி உள்ளது. இத்தாக்குதலைச் செய்த குண்டர்கள் யார்? இயக்கங்களுக்கு மேலால் ஒரு குண்டர் படை உருவாகி உள்ளதா? அப்படியாயின் அது அபாயத்தின் அறிகுறியேயாகும். ஜே. ஆர். இதுபோன்ற இனம் தெரியாத குண்டர்படையை வைத்தே வேலை நிறுத்தங்களை முறியடித்து எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்க முனைந்தார். அது போன்ற முயற்சியாகவே தமிழர் மத்தியிலும் இனம் தெரியாத குண்டர் படையா? என்று மக்கள் வினவுகிறார்கள். இந்த அரசினால் 279 தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை என சர்வதேச அரங்கில் மனித உரிமைப் பிரச்சனை கிளப்பப்படுகிறது. அது நியாயமானது சரியானதே. அதேவேளை விஜிதரன் மட்டுமல்ல மேலும் பல தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அப்படியாயின் தமிழர் மத்தியில் சக தமிழர்களாலேயே மீறப்படும் மனித உரிமைகளுக்கு பதில் என்ன? எனவேதான் இவற்றின் ஒரு வெளிப்பாடான விஜிதரன் பற்றிய விவகாரத்திற்கு நியாயமான தீர்வுவேண்டும் என மாணவர்களும் மக்களும் விரும்புவது முற்றிலும் நியாயமானதேயாகும். ★

புதிய பூமி

1986 கார்த்திகை 30

# இந்த நாடு யாருக்கு சொந்தம்?

இந்த நாடு யாருக்குச் சொந்தம்? இந்தக் கேள்விக்கு முதலாளித்துவ ஆளும் வர்க்க - குறுகிய அரசியல் லாப நோக்கில் பதில் காண முடியாது. வரலாற்று அடிப்படையில் ஆதாரபூர்வமான சான்றுகளுடன் மட்டுமே பதில் கூறவேண்டும்.

பல நூறு ஆண்டுகளாக - ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களாக இந்த நாட்டில் சந்ததி சந்ததியாக வாழ்ந்துவரும் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் அனைவருக்கும் இந்நாடு சொந்தம். அத்துடன் கடந்த ஒன்றரை நூற்றுண்டுகளுக்குமேல் இந்த நாட்டைத் தமது சொந்தப் பூமியாகக் கருதி இந்நாட்டின் வளத்திற்காக உழைத்துவரும் இந்திய வம்சாவழி மக்களுக்கும் இந்நாடு சொந்தமானதே. இத்தகைய மக்கள் சமூகத்தில் எந்த இனத்தவர் முந்தி வந்தவர், எவ்வினத்தவர் பிந்தி வந்தவர் என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது. எவரது எண்ணிக்கை கூடியது அல்லது குறைந்தது என்ற அடிப்படையிலும் நாட்டின் சொந்தக்காரர்களைத் தீர்மானிக்க முடியாது. மேற்கூறிய அடிப்படைகளை மட்டும் ஒரு விதியாகக்கொண்டு இலங்கையில் மட்டுமன்றி உலகில் எந்த ஒரு நாட்டினதும் உண்மையான சொந்தக்காரர்களை அடையாளம் காண முடியாது.

ஆதலால் இந்த நாட்டில் பலநூறு வருடங்களாக வாழ்ந்து, வளம் பெருக்கி நாகரீகத்தைக் கட்டி எழுப்பி, மனிதகுல வளர்ச்சிப் பாதையில் தமது உழைப்பின் பங்களிப்பை வழங்கி வந்த அனைத்து மக்களுக்கும் இந்நாடு சொந்தம். வரலாற்றடிப்படையில் இந்த நாடு அனைத்து சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களுக்கும் சொந்தமானது. அதேவேளை அவர்கள் அனைவரும் இன, மொழி, பிரதேச அடிப்படைகளில் ஒவ்வொரு பிரதேசங்களில் பாரம்பரியமாக பலநூறு வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மை எவ்வகையிலும் மறைக்கப்படக்கூடாது. அவர்களது தனித்துவமும், அடிப்படை அபிலாசைகளும் மறுக்கப்படமுடியாதவையாகும்.

இன்றைய முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினர் ஒருகால் இந்த நாடு சிங்கள இனத்திற்கும், பௌத்த மதத்திற்கும் மட்டுமே சொந்தமானது என்ற பொய்யைப் பரப்புவதும் மறுகால் தமது குறுகிய அரசியல் லாப நோக்கில் இந்த நாட்டில் வாழும் ''அனைவருக்கும் இந்த நாடு சொந்தம்'' என ஞானம் பிறந்ததுபோலக் கூறுவதும் பிற்போக்கானதும் சந்தர்ப்பவாத இழிநிலையுமாகும்.

இந்த நாடு ஒரு இனத்திற்கோ அன்றி ஒரு மதத்திற்கோ சொந்தமானது அல்ல என்பதையும் - அதைப் பாதுகாப்பது ஜே. ஆருக்கோ, அத்துலத் முதலிக்கோ, அல்லது அஸ்கிரிய பீடாதிபதிக்கோ மட்டும் உரிமையானதொன்றல்ல என்பதும் நிலைநாட்டப்படல் வேண்டும். அதற்கு இந்நாட்டுஉழைப்பாளி வர்க்கம் வர்க்க ரீதியில்கிளர்ந்தெழுந்து ஆளும் வர்க்கத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில் வீறுநடை போடவேண்டும். அதன் வெற்றியில்தான் இந்த நாடு அனைத்து உழைக்கும் மக்களினதும் சொந்த நாடு என்ற உன்னத நிலையும், தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களின் தனித்துவத்தை நிலைநாட்டி முன்செல்லக்கூடிய உண்மையான நிலையும் தோன்ற முடியும்.

— ஆசிரியர் குழு

# புரட்சிகர சக்திகளை அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம்

''புரட்சிகர சக்திகள் எங்கிருந்தாலும் அவர்கள் முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்படவேண்டியவர்களே. அவர்களை வளர்வதற்கோ, பலம் பெறுவதற்கோ, செயற்பாட்டில் இறங்குவதற்கோ எவ்வகையிலும் அனுமதிக்கக்கூடாது. நிலைமைகளை மீறி அப்புரட்சிகரசக்திகள் செயலில் இறங்கிவிட்டால் எந்த விலையைக் கொடுத்தாகிலும் அவர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டும்'' இதுவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், உலகப் பிற்போக்கு சக்திகளினதும் பிரதான நோக்கமாகும்.

இப்பிரதான நோக்கின் இலக்கு இன்றைய மூன்றும் உலக நாடுகளேயாகும். அந்நாடுகளிலேதான் புரட்சிகளும் போராட்டங்களும் நாளாந்தம் தீவிரமடைந்து வருகின்றன. யாருக்கு எதிராக? நிச்சயம் அமெரிக்காவிற்கும் அவர்களை ஒத்த மேலாதிக்க பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராகவே மூன்றும் உலக நாடுகளின் மக்கள் போர்க்கொடி ஏற்றி வருகிறார்கள்.

இத்தகைய நிலையில் புரட்சிகளும், போராட்டங்களும் நடைபெறும் நாடுகளின் புரட்சிகர சக்திகளை அழிக்க நேரடியாகவே ஆயுதங்களும், ஆட்களும், கூலிப்படைகளும் வழங்கி வருகிறது அமெரிக்கா. அப்படியான போராட்டங்கள் இடம்பெறாத நாடுகளில் புரட்சிகர சக்திகளின் போராட்டங்களை எதிர்நோக்கி அவற்றை மேல் எழும்பவிடாது தடுப்பதற்கு அமெரிக்காவும் அவர்களது கையாட்களும் தினம் தினம் வேலை செய்துகொண்டே வருகிறார்கள். அதற்காக என்னென்ன வழிமுறைகளை மூன்றும் உலக நாடுகளில் அரசியல் ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்தே வருகிறார்கள். பொருளாதார உதவிகள், கலாச்சார ஊடுருவல், பிரச்சார வசதிகள் ஆயுத விற்பனைகள், ஆலோசகர்கள் விநியோகம் போன்றவற்றை அந்நாடுகளின் தமக்காதரவான ஆளும் வர்க்க அரசுகளின் ஊடே கொடுத்து நடைமுறைப்படுத்தியே வருகிறார்கள். தனக்கு வசதியான அரசுகள் கிடைக்காதவிடத்து பிற்போக்கு அரசியல் குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் சலிப்படையாது செயல்பட்டு வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இந்த வகையில் இலங்கையிலும் அமெரிக்கா தனது கைவரிசைகளை நேரடியாகவும், மறைமுகமாக இரண்டாம் மூன்றும் பேர்வழிகள் ஊடாகவும் திறம்பட நடத்திக்கொண்டிருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாக ஜே. ஆர். தலைமையிலான யூ. என். பி. ஆட்சிக்கு அமெரிக்கா கொடுத்த உதவிகளும், ஆலோசனைகளும் அவற்றுடன் தனது சகபாடி நாடுகளான பிரிட்டன், தென் கொரியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மூலமாகக் கொடுத்த ராணுவ பொருளாதார உதவிகளும்தான் பேரினவாத வெறிக்கு பலம் கொடுத்து வந்த சத்துணவுகள் என்பது மறுக்கப்பட முடியாதவை. அதேவேளை போராடும் அரசியல் குழுக்களிடையேயும் அமெரிக்காவின் செல்வாக்கு வெவ்வேறு வழிகளில் இடம் பெறவில்லை என்று எவரும் சத்தியம் செய்ய முடியாது. உதவி, சேவை, குறைந்தவிலை, சந்தைவிலை என்ற பெயர்களில் அல்லது பிரச்சார வசதிகளைப் பயன்படுத்தல் என்ற நிலைமைகளில் எவர் எவரைக் கைகளில் போடமுடியுமோ அதைச் செய்துகொள்வதே அமெரிக்காவின் செயல்பாடாகும்,

ஏனெனில் அமெரிக்கா ஒரு ஏகாதிபத்திய வல்லரசு. அதற்கு உலகம் தழுவிய ஒரு முதலாளித்துவ வர்க்க நலன் உண்டு. அம் முதலாளித்துவ அமைப்பு முறையை அமெரிக்காவில் மட்டுமன்றி உலகம் பூராவும் பாதுகாத்து நிலைநிறுத்த வேண்டிய நிலையில் உள்ளது. அதனால் எங்கெங்கு புரட்சிகர சக்திகள் வளர்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றை ஒழித்துக்கட்ட தனது முழுப் பலத்தையும் பல்வேறு வழிகளில் செலவிடுகிறது. அதற்காக யுத்தம் என்பது உலகில் சதா நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே அதன் அவாவாகும். ஏனெனில் யுத்தம் இல்லாவிடின் ஏகாதிபத்தியத்தால் உயிர்வாழ முடியாது. ஆயுத உற்பத்தி பெருகவும் - விற்பனையாகவும் யுத்தம் ஒரு பிரதான தேவையாகிறது ஏகாதிபத்தியத்திற்கு. அதேவேளை புரட்சிகர சக்திகளை அழித்தொழிக்க அவ்வாறான யுத்தங்களை ஓயவிடாது விஸ்தரிக்கவே ஏகாதிபத்தியம் முயன்று கொண்டிருக்கும்.

இவ்வாறு முன்பு ஒரு தடவை இலங்கையில் யுத்த நிலை தோற்றுவிக்கப்பட்டது. அதன்மூலம் இளம் புரட்சிகர சக்திகள் பல்லாயிரக் கணக்கில் அழித்தொழிக்கப்பட்டனர். அதேவேளை அரசு யந்திரம் பல பத்து மடங்கு பலப்படுத்தப்பட்டது. அன்று சிங்கள மக்களிடையே வளரக்கூடிய எதிர்காலப் புரட்சிகர சக்திகள் கொழுந்து நிலையில் கிள்ளி எறியப்பட்டன. இன்று தமிழர்கள் மத்தியில் வளர்ந்து வரக்கூடிய இளம் புரட்சிகர சக்திகளை அழித்தொழிக்க அமெரிக்கா ஆரவாரமின்றி ஜே. ஆர். அரசுக்கு தனது முழு ஆதரவையும் அளித்து வருகின்றது. வர்க்க ரீதியில் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு புரட்சியை எவ்வாறு தடுப்பது, திசை திருப்புவது, சீரழிப்பது என்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமன அவாவாகும். அதற்கு சந்தர்ப்பம் எந்த வழிகளில், எந்த ரூபங்களில் கிடைத்தாலும் அமெரிக்காவும், அவர்களது சர்வதேசக் கூட்டணிகளும் அதைப் பயன்படுத்தியே தீருவார்கள். விழிப்பாகவும், முன்னோக்கிய தூரதிருஷ்டியுடனும் நடந்து கொள்ளவேண்டியது தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களினதும் விழிப்புணர்விலேயே தங்கியுள்ளது. இல்லாவிடின் அமெரிக்க - ஜே. ஆர். கூட்டுச் சதிக்கு தமிழ் மக்களிடையே வளரக்கூடிய புரட்சிகர சக்திகளே பலியாகி அழிந்துபோக நேரிடும்.

# விஜிதரன் எங்கே?

யாழ் - பல்கலைக் கழக மாணவன் அ. விஜிதரன் கடந்த 4-11-86ல் காணமல் போய்விட்டார். பல்கலைக் கழகத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் தங்கி இருந்து படித்துவந்த அம்மாணவன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர் எவ்வாறு காணமல் போனார் என்பது மர்மத்திற்கு மேல் மர்மமாக உள்ளது. நிச்சயமாக அரச படைகள் அம் மாணவனைக் கொண்டு சென்றிருக்க முடியாது. அவருக்கு தனிப்பட்ட எதிரிகளோ, பகையாளிகளோ இல்லை என அவரது தந்தையாரும் குடும்பத்தினரும் நண்பர்களும் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் விஜிதரனுக்கு என்ன நடந்தது என்பதும் புரியாத புதிராக உள்ளது.

இன்றுவரை விஜிதரன் கண்டுபிடிக்கப்படாததினால் பலவித ஊகங்கள் மக்களிடையே பகிரங்கமாகவும் இரகசியமாகவும் பேசப்படுகிறது. விஜிதரன் கடத்தப்பட்டு மறைக்கப்பட்டிருக்கக்கூடும் என்றும் அல்லது நிரந்தர மறைவிடத்திற்கே அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் மக்கள் ஊகிக்கின்றனர். இவ்வாறு மக்கள் ஊகிப்பதற்கு காரணம் நிறைய உண்டு. கடந்தகாலங்களிலிருந்து வடக்கு கிழக்கில் நூற்றுக்கு மேற்பட்டோர் கடத்தப்பட்டிருக்கிறார்கள், கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ காரணங்களும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சிலருக்கு என்ன நடந்தது என்பது வெளிவரவே இல்லை. இது பொதுவானதும் கண்மூடித்தனமானதுமான அராஜகத்தின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. இந்த விடயத்தில் கிட்டத்தட்ட சகல இளைஞர் இயக்கங்களுமே சம்பந்தப்பட்டிருந்தன. இவ்வித கொடிய அராஜகப் போக்கிற்கு விரும்பியோ விரும்பாமலோ ஆதரித்து நியாயம் கற்பித்து வந்த சகலருமே இன்று ''அராஜகம் கூடிப்போச்சு'' என்று கூறும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது. அந்த நிலைமையின் உச்ச வெளிப்பாடே விஜிதரனின் மறைவாக இருக்கின்றது.

விஜிதரன் மாற்று அரசியல் கருத்து கொண்டிருந்த காரணத்தால் கடத்தப்பட்டு மறைக்கப்பட்டதாகவே மாணவர்கள் மத்தியில் பேசப்படுகின்றது. அது உண்மையா

(8ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு இணைப்பும் பேச்சுவார்த்தையும்

தமிழ் மக்களுக்கென்று ஒரு பாரம்பரிய பிரதேசம் இல்லையெனச் சில பேரினவெறியர்கள் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறார்கள், தமிழ்ப் பிரதேசங்கள் மன்னராட்சிக் காலங்களில் தனித்துவத்துடன் விளங்கியிருக்கின்றன. அந்நியராட்சிக் காலத்தில் — போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் தமிழ்ப் பிரதேசங்களின் தனித்துவ அமைப்பை அனுசரித்தே ஆட்சி செய்தனர். ஆங்கிலேயரே முதன் முதலாக முழு இலங்கையையும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொணர்ந்தனர். ஆங்கிலேயருங்கூட, இப் பாரம்பரிய பிரதேசங்களின் தனித்துவங் காரணமாக, யாழ்ப்பாணத்துக்கேயுரிய ''தேசவழமைச் சட்டத்தையும்'' மட்டக்களப்புக்கேயுரிய ''முக்குவர் சட்டத்தையும்'' அங்கீகரிக்க வேண்டியேற்பட்டது. அதே வேளை, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குத் தமிழினமே பெரிதும் பலிக்கடாவாகவேண்டியுமேற்பட்டது. சுதந்திரத்துக்குப் பின்னரும், ஏகாதிபத்திய நலனைத் தொடரும் வண்ணமாகப் பிரித்தானியா விட்டுச்சென்ற பாராளுமன்ற அமைப்பில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும், இனவாதத்தையே மாறி மாறி வளர்த்துவந்ததால் இன்றைய நெருக்கடி நிலை உருவானது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கைக்கு அரசியல் ரீதியாக வழங்கிய 'சுயநிர்ணய உரிமை'யின் குறைபாடுமிக்க அரசியலமைப்பு, மீண்டும் தமிழ் மக்கள் தமதுசுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டிய உள்நோக்கத்தைத் தன்னகத்தேகொண்டதாக இருந்ததன் வெளிப்பாடே இன்றைய நெருக்கடி நிலை.

தமிழ் மக்கள், தமக்கெனப் பாரம்பரிய பிரதேசங்களைக்கொண்ட, நீண்டகால வரலாறுடைய ஒரு தேசிய இனமாகும். தேசிய இனம் என்ற வகையில் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு.

தமிழ் தேசிய இனம் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் எனக்கோரும் பட்சத்தில், அக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த நியாயமான கோரிக்கையை சுயநல வேட்கைகொண்ட மிகச் சிறு தொகையினரான பேரின வெறியர்களும் தேசிய இனப் பிரச்சனையை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களும் மட்டுமே நிராகரிக்க முடியும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது), தமிழ் தேசிய இனத்தின் நியாயமான போராட்டத்தை - கோரிக்கைகளை ஆதரிக்கிறது. அந்தவகையிலே, வடக்கு - கிழக்கு இணைப்பையும் ஆதரிக்கிறது.

## அரசின் உள்நோக்கம் முக்கியம் அல்ல

## தமிழ் மக்களின் அபிலாஷைகளே பிரதானம்

கிழக்கு மாகாண மக்களுக்குத் தனித்துவமான வரலாறு - வேறுபட்ட பிரச்சனைகள், அபிலாசைகள் உண்டு என்ற அடிப்படையில், வடக்கு - கிழக்கு இணைப்பைக் கிழக்கு மாகாண மக்கள் தாமாகத் தீர்மானிக்கவேண்டுமென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது), தற்காலச் சூழ்நிலையைக் கவனத்திலெடுத்து - எதிர்கால நன்மையைக் கருதியதன் பேரில் வலியுறுத்துகிறது. இணைவின் பின்னே தோன்றும் பிரச்சனைகளால் உடைவு ஏற்பட்டு, பிரிவு ஏற்படுவதைவிட, ஆழமான புரிந்துணர்வுடன் இத்தீர்வினை நாடுவது, நீண்டகாலத்தில் பயன்தரக்கூடியதாகும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு ஒரு தனிப்பிரச்சனை. இது முழுமையான பிரச்சனைத் தீர்வுக்கு அவசியமான பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிபந்தனைகள் பயன்தராது. பேச்சுவார்த்தை பரஸ்பர புரிந்துணர்வுடன் நடத்தப்பட்டு, விட்டுக்கொடுத்து வென்றெடுத்தலைக் குறிக்கோளாய்க் கொண்டிருக்க வேண்டும். அந்த வகையிலே பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்படும் தீர்வில் தமிழ் தேசிய இனம் தனது இலக்கைச் சரியாகத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

எந்தத் தீர்வுகளும் கால - தேச - வர்த்தமானங்களால் (நிலைமைகளால்) மாறக்கூடியவையே. அவ்வாறே சுதந்திரத்துக்கும் ஒரு எல்லையோ, வரையறையோ இடையாது. அந்த வகையிலே, பிரதேச சுயாட்சியை முன்வைப்பவர்கள் பிரிவினைக்காகப் போராடவும்கூடும்: பிரிவினைக்காகப் போராடியவர்கள் ஒற்றையாட்சியின்கீழ் சுமுகமான அரசியல் தீர்வுக்கு முன்வரவும் முடியும். அவ்வாறே பிரதேச இணைவும் - பிரிவும் அமையும். இப்பிரச்சனையைத் தீர்க்கதரிசனத்தோடு அணுகுவது மிக மிக அவசியமானதாகும். இலங்கையென்ற ஒரு நாட்டினுள் தேசிய இனப் பிரச்சனை மோதல்களில் மக்கள் முட்டி மோதிக்கொண்டிருக்கத் தமது சுயலாபத்தைத் தொடர்ந்து உறுஞ்சமுடியும் என்ற நயவஞ்சக நோக்கில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் விட்டுச்சென்ற அரசியலமைப்புப் போன்று, தமிழ் தேசிய இனத்துக்கான தீர்வில் முன்வைக்கப்படும் அமைப்பும் அமையக்கூடாது.

பலவித குறுக்கீடுகளால் திம்புப் பேச்சுவார்த்தை பலனற்றுப் போயிற்று. இன்று மீண்டும் பேச்சுவார்த்தைக்கான ஒரு சந்தர்ப்பத்தை மக்கள் ஏற்படுத்தியுள்ளனர். இதனை நாம் வரவேற்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறுபான்மையினமாக உள்ள மக்கள் நமது பாதுகாப்புக் குறித்தும் கலை- கலாச்சார - பொருளாதார அபிவிருத்தி குறித்தும் நம்பிக்கையிழந்த சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதால், ஒவ்வொரு சிறுபான்மை இனமும் செறிந்துவாழும் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கப்பட்டு, அவை விரும்பினால் ஒன்றோடொன்று இணையவும் அவசியமானபோது பிரிந்து இயங்கவும் சுயாட்சிக்கு (தனித்தனியாகவும் குழுக்களாகவும்) பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

இத்தகைய உத்தரவாதத்தோடு சகல இன மக்களையும் திருப்திப்படுத்தும் இடைக்காலத் தீர்வொன்றைக் காண்பது கடினமான ஒன்றல்ல. இன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் இலங்கையரசினதும் அறிக்கைகள் இத்தகைய நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையிலேயே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இடைக்கால அரசியல் தீர்வொன்று ஈட்டப்படும் பட்சத்தில் நீண்டகாலக் கோரிக்கைகளிலும் நிதானமான பாய்ச்சலுக்கு வழிசமைக்கப்பட்டுவிடும். தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கை குறித்த முடிவுகளைத் தமிழ்மக்களே எடுக்கவேண்டும். அது பற்றிய மக்களின் தீர்ப்பும் நீண்டகாலமாய் அறியப்படவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில், இன்றைய நிலையில், ஓர் இடைக்காலத் தீர்வின் வாயிலாக தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உதவும் சுயாட்சி அமைப்பைப் பெற்று, நீண்டகாலத் தீர்வுக்கு அதனைப் படிக்கல்லாக்கவேண்டுமென்பதே புத்திசாலித்தனமானதாய்த் தோன்றுகிறது.

அந்த அபிலாஷையை நிறைவுசெய்யும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சகல விடுதலை இயக்கங்களும் ஐக்கியப்பட்டு, ஒருமுகப்பட்ட கோரிக்கைகளுடன், மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முகம்கொடுக்க வெண்டுமென மக்கள் விரும்புகின்றனர். ★

## தெரிந்தவையும் — அறிந்தவையும்

சம்ராய்

## விற்பனையாகிறது

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளாக வெளிவந்திருக்கும் கவிஞர் **இ. முருகையன்** அவர்களின் இரு நூல்கள் விற்பனையாகின்றன.

**அது அவர்கள்** (கவிதை நூல்) ரூபா 10/-

**வெறியாட்டு** (நாடகம்) ரூபா 10/-

**தாயகம்** (16வது இதழ்) ரூபா 5/-

**வசந்தம் புத்தக நிலையம்**
374A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## தீ

தீ எரிகுது! தீ எரிகுது! தீ எரிகிறதே!
எட்டுத்திசையிலும் எட்டுந்தொலைவரை தீ எரிகிறதே!

காலைப்பொழுதினில் கீழை முகில்களில் செம்மை படர்வதுண்டு;
மாலையினில் அவை மேலைத்திசையின் மீண்டுஞ் சுடர்வதுண்டு.
நட்டநிசியினில் வானம் எரிவது நாங்கள் அறிந்ததில்லை;
இட்டவரார் செய்ய விட்டவரார்எமக் கிந்தக் கொடுமைதனை?

(தீ எரிகுது)

தீய அசுரர்கள் மாநகர்வெந்தது ஈஸ்வரனூர் சினத்தில் —
தீய அசுரர்கள் தீயிடவந்தனர் எங்கள் திருநகரில்.
நீதி தவறிய தாலெரிபட்டது மாமதுரை நகரம் —
நீதி தவறிய ஆட்சி எரித்தது எங்கள் எழில் நகரம்.

(தீ எரிகுது)

மூண்டு எழுகிற தீயை அடக்கிட நீரை இறைத்திடுவோம் —
மீண்டும் அம்மூர்க்கர் மூட்டவராதொரு பாடம் புகட்டிடுவோம்!
தீமைகள் மாய்ந்திடத் தீயவர் சாய்ந்திடத் தீச்சுடர் ஏந்திடுவோம்
பூமியிலே கொடுங் கோன்மை ஒழிந்திடப் போரொன்று செய்திடுவோம்!

(தீ எரிகுது)

ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளமுனைந்திடலாம்
மாண்ட கொடுமைகள் மீண்டும் எழாதொரு மார்க்கம் அமைத்திடுவோம்!
மானுடர் யாவரும் ஒன்று, சமத்துவம் ஓங்குக என்றெழுவோம் —
மானுடம் ஒன்றிந்த மானிலம் ஒன்றென ஓங்கி முழங்கிடுவோம்!

தீ எரியட்டும், தீ எரியட்டும், தீமையெலாம் கருக!
புதுத் —
தீ எரியட்டும், தீ எரியட்டும், புத்துலகம் மலர!

— ஸ்வப்னா —

# இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும் - 4

★ இமயவரம்பன் ★

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அண்மைக்காலத்திலேயே தேசிய இனப்பிரச்சனை உக்கிரமடைந்ததையும் சிங்களப் பேரினவாதமும், சிறுபான்மையினரிடையே குறுகிய இனவாதமும் நடுத்தர வர்க்கத்தினரின் குறுகியகால நலன்களை ஆதாரமாகக் கொண்டே வளர்க்கப்பட்டன என்பதையும் கண்டோம். இன முரண்பாடுகளின் வளர்ச்சி தேசிய முதலாளித்துவத்தின் நலன்கட்கு உதவுவதாகத் தோன்றினும் அது நாட்டின் இனங்களிடையே, முக்கியமாக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அணிதிரளக் கூடிய சக்திகளிடையே, முரண்பாடுகளை வளர்ப்பதால், இறுதி ஆராய்வில், அது

## இலங்கைத் தேசிய காங்கிரசின் பிளவுக்குப் பின்பே இனவாதம் இலங்கை அரசியலில் வலிய ஆயுதமாகியது

ஏகாதிபத்தியத்தின் நலன்களையே பாதுகாக்கிறது. தேசிய முதலாளித்துவமும் பெரும்பான்மை இனத்தவரும், சிறுபான்மை இனத்தவரும், நாட்டின் பொருளாதாரம் இனப்பகையின் விளைவாகப் பலவீனமடைவதால் இறுதியில் தம் நலன்களை ஏகாதிபத்தியத்திற்குப் பலியாக்கிவிடுகின்றனர். ஆயினும் தேசிய முதலாளித்துவமும் குட்டி பூஷுவா வர்க்கமான நடுத்தர வர்க்கமும் தம் ஊசலாடும் மனப்பான்மை காரணமாகவும் குறுகியகால நலன்களையிட்டு நீண்டகால நலன்களைப் பறிகொடுக்கும் தம் குறுகிய வரலாற்றுப் பார்வை காரணமாகவும் எளிதாகவே இனவாதத்துக்குப் பலியாகிவிடுகின்றனர்.

பூஷுவா ஜனநாயக அரசியலில் பொதுவாக முதலாளித்துவ வர்க்க நலன்களே

## திட்டமிட்ட குடியேற்றமும் பிரசாவுரிமை பறிப்பும் தமிழர்களுக்கு எதிரான ஆரம்ப நடவடிக்கைகளாகும்

பேணப்படுகின்றன. பூஷுவா பாராளுமன்ற அரசியல் சர்வஜன வாக்குரிமையைப் பேரளவில் முதன்மையானதாகக் கொள்வதால், முதலாளி வர்க்க நலன்களைப் பேணும் கட்சிகளே தேர்தலில் வெற்றி பெறுவதற்காக முதலாளித்துவ வர்க்கம் பல உபாயங்களைக் கையாள்கிறது. பாராளுமன்ற அரசியலில் ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி மோதல் உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் மத்தியிலுள்ள முரண்பாடுகளை மட்டுமே பிரதிபலிக்கிறது. ஒரு சில சூழ்நிலைகளில் இம் முரண்பாடுகளின் சில கூரிய அம்சங்கள் வலியுறுத்தப்படும்போது, தேசிய சுயநிர்ணயம், தேசிய ஒருமை, பொருளாதார சுதந்திரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியன பாராளுமன்ற அரசியல்

## தெற்கின் அரசியல் பேரினவாதத்திற்கு இரையாகியது வடக்கிலே குறுகிய இனவாத அரசியல் விலை போனது

அதிகாரத்திற்கான மோதலில் முதன்மை பெறுகின்றன, நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்குட்படும்போது முதலாளித்துவ சீர்திருத்தவாதத்திற்கும் முதலாளித்துவ அடக்குமுறைக்குமிடையான முரண்பாடு கூர்மை அடைகிறது. இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளில் கல்வி, வேலைவாய்ப்புக்கள் போதாமை, பொருளாதாரத் தேக்கம் போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை மறைக்கவும் துரிதமான சமுதாய மாற்றத்தை மறிக்கவும் இனவாதம் ஒரு வலிய ஆயுதமாகி விடுகிறது. இலங்கையில் மட்டுமன்றி மூன்றுமுலகின் பல நாடுகளிலும் இனவாதம் ஒருவகையில் இல்லாவிட்டால் இன்னொரு வகையில் பிற்போக்குச் சக்திகளால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலில் இனவாதப் போக்குகள் இந்த நூற்றுண்டின் முற்பகுதியிலேயே காணப்பட்டன. எனினும் இனவாதம் ஒரு வலிய அரசியல் ஆயுதமாக விருத்தியடைந்தது இலங்கை தேசிய காங்கிரஸின் பிளவின் காலத்தை அடுத்தே எனலாம். தன்னை ஒரு தேசியக் கட்சியாகக் காட்டிக்கொண்ட யூ. என். பி. இனவாதச் சக்திகள் சிறுபான்மை இனத்தினரதும் பாட்டாளி வர்க்கத்தினதும் அரசியல் வலிமையைக் குறைப்பதற்கான காரியங்களையே தன் பிரதான பணிகளாகக் கொண்டிருந்தது. கிழக்கு மாகாண தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றமும் மலையக மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறிக்கும் சட்டங்களும் இதற்கான முக்கிய உதாரணங்கள். அதே சமயம் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதான பாராளுமன்ற அரசியல் தலைமை இவற்றை எதிர்ப்பதில் அதிக அக்கறை காட்டாமையும் முக்கியமாக பிரஜாவுரிமைச் சட்டத்தில் யூ, என். பி. யுடன் ஒத்துழைத்தமையும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்ப் பிரதிநிதிகளிடையே பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தோரின் விகிதாசாரத்தைவிட யூ.என். பி. சாராத சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரிடையே அதை எதிர்த்து வாக்களித்தோர் விகிதாசாரம் பன்மடங்கு அதிகம் என்பது பிரச்சனையின் வர்க்கத் தன்மையையே வலியுறுத்துகிறது. இப்பிரச்சினையைக் காரணங்காட்டி தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது. இப்பிரச்சினையை 1952 பாராளுமன்றத் தேர்தலில் முதன்மைப்படுத்திய தமிழரசுக் கட்சியின் தோல்வி, வடக்கு - கிழக்கு மாகாண அரசியலில் மலையக மக்களுடனான 'இன ஐக்கியம்' எவ்வளவு முக்கியம் பெற்றிருந்தது என்பதையே காட்டுகிறது.

50க்கு 50, அரசாங்கத்தில் மந்திரி பதவிகளைப் பெற்றுத் தமிழர்களின் நலன்களைப் பேணுவது போன்று 'தந்திரத்தால்' தமிழ்மக்களின் பொருளாதார நலன்களைப் பேணலாம் என்று மக்களை நம்பவைத்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 'கெட்டிக்கார' அரசியல் யூ. என். பி. களனி மகாநாட்டில் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாகும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டபோது ஆட்டங்கண்டது. யூ. என். பி. யும் யூ. என். பி.யிலிருந்து பிரிந்துவந்த பண்டாரநாயக்கா அமைத்த ஸ்ரீ. ல. சு. கட்சியும் சிங்கள மொழியை இலங்கையின் அரச கரும மொழியாக்கும் கொள்கையை ஏற்றுக் கொண்டே 1956 தேர்தலில் போட்டியிட்டபோதும் ஸ்ரீ. ல. சு. கட்சியின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி பெருவெற்றி கண்டது. இவ்வெற்றியையொட்டி வடக்கிலும் தமிழ்க் காங்கிரஸ் படுதோல்வி பெற்றது. ஸ்ரீ. ல. சு. கட்சி இலங்கையின் தேசிய முதலாளித்துவத்தின் நலன்களை அடிப்படையாகக் கொண்டது. ஏகாதிபத்திய விரோத உணர்வுகளையும் சிங்களம் படித்த நடுத்தர வர்க்கத்தினரிடையே ஆங்கிலம் படித்த அதிகார வர்க்கத்தினதுக்கெதிரான உணர்வுகளையும் அது தனக்குச் சாதகமாகக் கொண்டு செயற்பட்டது. ஸ்ரீ. ல. சு. கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சி அல்ல. அதன் மத்தியில் குறுகிய தேசியவாதம் (அதாவது சிங்களப் பேரினவாதம்) இருப்பது இயல்பானதே. ஆயினும் அதன் ஏகாதிபத்திய விரோதத் தன்மை அதைத் தேசிய அடிப்படையில் ஒரு முற்போக்கான சக்தியாகச் செயற்பட அனுமதிக்கிறது. யூ. என். பி. யின் அரசியலோ ஏகாதிபத்தியச் சார்புடையதும் பெருமுதலாளித்துவ வர்க்க நலன்கட்காக இனவாதத்தைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பவாதத்தையுடையதும் ஆகும். 1956 தேர்தலில் யூ. என். பி. விரோத உணர்வுகளை வெளிப்படுத்திய தமிழரசுக்கட்சி, வடக்கு - கிழக்கு அரசியலில் நிர்மூலமாக்கப்பட்ட தமிழ்க் காங்கிரஸின் தரகு முதலாளி வர்க்கத் தன்மையினின்றும் தன்னை வேறுபடுத்திக்கொள்ளவில்லை. இதன் விளைவுகள் பிற்காலத்தில் பலவகைகளிலும் தம்மை வெளிப்படுத்தின,

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாராளுமன்ற இடதுசாரிகள் வெற்றிபெறத் தவறியமையும் (1956இல் பருத்தித்துறை தொகுதி ஒரு விசேஷ விதிவிலக்கு). அங்குள்ள அரசியல் சர்வதேசிய அரசியற் பார்வையோ முழு நாட்டினதும் அரசியலையையும் பொருளாதாரத்தையுமே கருத்திற் கொள்ளாதவிதமாக விருத்தியடைந்தமைக்கு பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதத்தை மட்டுமே காரணங்காட்டுவது மிக மலிவான அரசியல் பிரசாரம். உண்மையான காரணங்கள் வடக்கினதும் இழக்கினதும் சமூக பொருளாதார அமைப்புக்களின் மீதே தங்கியிருந்தன.

சிங்களப் பிரதேசங்களின் அரசியல் ஒரு புறம் பேரினவாதத்திற்கு இரையாகியபோதும் அங்கு ஏகாதிபத்திய விரோத உணர்வுகளும் சீர்திருத்தவாதமும் அரசியலில் முக்கிய பங்கு வகித்தன. சிங்கள மக்களின் ஏகாதிபத்திய விரோத உணர்வையும் சமுதாய மாற்றத்திற்கான விருப்பத்தையும் சரியான முறையில் அணிதிரட்டி ஒரு புரட்சிகர சக்தியை வளர்த்தெடுக்க முடியாத ட்ரொட்கிவாதிகளும் பாராளுமன்றவாதக் கொம்யூனிஸ்ட்டுகளும் பேரினவாதத்தை எதிர்ப்பதில் போதிய தீவிரம் காட்டத் தவறினர், இது அவர்களது சந்தர்ப்பவாதத் தலைமைகள் எதிர்பார்த்ததற்கு மாறாக பாராளுமன்ற அரசியலில் அவர்களை மேலும் பலவீனப்படுத்தி ஸ்ரீ ல. சு. க. யின் தயவிலேயே பாராளுமன்ற ஆசனங்களை வெல்லும் நிலைக்குத் தள்ளியது. இதனையொட்டி தொழிற்சங்க இயக்கத்திலும் வெகுஜன அரசியலிலும் இடதுசாரிகளின் செல்வாக்கும் பலவீனமடைந்ததுடன் தொழிலாளி வர்க்கத் தலைமையிலான போராட்ட சக்திகளும் பலவீனமடைந்தன, தேசிய முதலாளித்துவக் கட்சிகள் தொழிற்சங்கத் துறையிலும் பெரும் ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாயிற்று. இருந்தபோதிலும், சிங்கள மக்கள் மத்தியில் இடதுசாரிச் சிந்தனை மரபும் இடதுசாரி அரசியல் மரபும் ஒரு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்றும் பேரினவாத அரசியற் கோஷங்களாலும் யூ. என். பி யின் அடக்குமுறையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும் சிங்கள மக்கள் மத்தியில் ஏகாதிபத்திய விரோத உணர்வுகளும் ஜனநாயக உரிமைகள் பற்றிய உணர்வுகளும் அடக்க இயலாத சக்திகளாகத் தொடர்ந்தும் செயற்படுகின்றன.

தமிழ் மக்கள் மத்தியிலான அரசியல் பரவலாகவே ஒற்றைப் பிரச்சனையை மையமாகக் கொண்ட ஒரு கட்சி அரசியலாகவே இருந்து வந்தது. முக்கியமாக 1956 முதல் தமிழரசுக் கட்சி 1965இல் யூ. என், பி. யுடன் கூட்டுச் சேரும் வரை மொழிப் பிரச்சனை மட்டுமே ஆதிக்கம் செலுத்தியது. (அலங்காரத்திற்காக பிரசாவுரிமையும் சிங்களக் குடியேற்றமும் உச்சரிக்கப்பட்டன. சமஷ்டி என்பது அரசியல் தீர்வாகப் பிரேரிக்கப்பட்டபோதும் 1961 சத்தியாக்கிரகத்தின்பின் அது ஏறத்தாழ மறக்கப்பட்டுவிட்டது) 1965 - 1969 வரை பிரச்சினைகளே இல்லாமையும் 1969இல் திடீரென்று யூ, என். யி.யுடன் ஊடலும் பிரிவும் 1970 தேர்தலை ஒட்டியே நேர்ந்தன. 1970இல் ஸ்ரீ ல. சு. க. கூட்டணி வெற்றியை அடுத்து தமிழரசு - யூ. என். பி. உறவு மிகவும் அருவருக்கத்தக்க முறையில் விருத்தியடைந்தது. எனினும் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் தமிழர்களது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்ட கட்சிகளாகத் தம்மைப் பிரகடனம் செய்துகொண்ட கட்சிகளே இன்றுவரை பாராளுமன்ற அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளதோடு அவை இயன்றவரை சிங்கள முற்போக்குச் சக்திகளினின்று தமிழ் மக்களைத் தனிமைப்படுத்துவதில் மிகுந்த அக்கறை செலுத்தின என்பதே. பிரித்தானிய கடற்படை விமானத் தளங்களை அகற்றுதல், நெற்காணிச் சட்டம், அந்நிய எண்ணெய்க் கம்பனிகளை தேசியமயமாக்கல், அரச உதவிபெறும் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல் போன்ற நடவடிக்கைகளைத் தமிழ் அரசியல் தலைமைகள் வேறுபாடின்றி எதிர்த்தன. முக்கிய சர்வதேச சம்பவங்கள் பற்றி மௌனம் சாதித்த தமிழரசுக்கட்சி சீன - இந்திய எல்லைத் தகராற்றில் வெகு தீவிரமாக சீனாவைச் சாடியது. 1971 ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பாக சீனாவைக் குற்றஞ் சாட்டுவதில் தமிழரசுக் கட்சியினர் யூ என். பி. யினரையும் முந்தினர். தமிழரசுக் கட்சிப் பிரசார ஏடான சுதந்திரன், தமிழ்க் காங்கிரஸின் வீழ்ச்சியை அடுத்து, தன் தாக்குதலை இடதுசாரிக் கட்சிகள் மீதே பிரயோகித்தது என்றால் மிகையாகாது. சமஷ்டி கேட்டு நின்ற ஒரு கட்சி, அக் கோரிக்கைக்கு ஆதரவு தரும் வாய்ப்புள்ள சக்திகளான இடதுசாரிகள்மீது கொடுத்த தாக்குதலும் சமஷ்டி பற்றிச் சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்ய நடைமுறைச்சாத்தியமான முயற்சி எதுவுமே எடுக்காமையும் மிக விநோதமானது. உண்மை ஏதெனில், அவர்கள் தமிழ்ப் பிரதேச அரசியலில் ஆதிக்கம் செலுத்த இனப்பிரச்சினை மிகவும் பயனுள்ள சாதனமாக இருந்தது. இடதுசாரிகள் அந்த வாய்ப்பைத் தம்மிடமிருந்து பறிக்கக்கூடுமென்ற அச்சமும் இடதுசாரிகட்குத் தாழ்த்தப்பட்ட தமிழ்மக்களிடையிலான பரவலான செல்வாக்கும் தமிழ்த் தொழிலாளர் இடதுசாரிக் கட்சிகளின் தலைமையில் திரள்வது தமது வர்க்க நலன்கட்கு ஆபத்தானது என்ற உணர்வுமே தமிழரசுக் கட்சியை இடதுசாரிகளை எதிர்க்கத் தூண்டியது. இவ்வாறான அரசியலை வடக்கில் நிலைபெறவும் நீடிக்கவும் அங்கிருந்த சமுதாய அமைப்பும் அதன்மீது அரசாங்க உத்தியோகத்திலிருந்தோரின் பெரும் செல்வாக்கும் மிகவும் உதவின. கல்வியையும் அரச உத்தியோகத்தையும் பார்த்திருந்தோருக்கு பேரினவாதத்தின் வளர்ச்சி ஒரு பெரு மிரட்டலாகத் தோன்றியது இயல்பானதே. வடக்கின் பழமைவாதமும் சாதி முறையின் பிடிப்பும் பாராளுமன்ற அரசியலில் ஒரு பயனுள்ள கருவியாகச் செயற்பட்டதுடன், சுரண்டப்படும் 'உயர் சாதி' மக்களிடையே இடதுசாரிகளைக் கொடியவர்களாகக் காட்டுவதிலும் பயன்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்களை தமிழரசுக்கட்சி பயன்படுத்திய முறையும் கவனத்திற்குரியது, சிங்களம் மட்டுமே சட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஆத்திரத்தைத் தமிழரசுக் கட்சியினர் தமது வாய்ச்சொல் வீரத்திற்கு வடிகால்களாகப் பயன்

(5ம் பக்கம் பார்க்க)

## இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்-4

இமயவரம்பன்

படுத்தினார்களே ஒழிய அதைத் திட்டமிட்ட முறையில் ஒழுங்குபடுத்தி நியாயத்திற்கான போராட்டமாக வளர்த்தெடுக்க ஆயத்தமாக இருக்கவில்லை, 1957இல் திருகோணமலை மாநாடும் அதற்குக் கால்நடையாகப்போன நீண்ட ஊர்வலமும் பின்னிய வாய்ப்பந்தல் 1961இல் (சத்தியாக்கிரகத்தை அடுத்து அவர்களது செயலற்ற தன்மை வெளிப்பட்டபோது) முற்றாகவே பிரிந்து விழுந்தது. வாகனங்களில் ஆங்கில எழுத்துக்கட்குப் பதிலாக சிங்கள ஸ்ரீ எழுத்து புகுத்தப்பட்டதை ஒரு பெரிய பிரச்சனையாக்கி ஒருவித முன்னேற்பாடுமின்றி ஆரம்பித்த போராட்டம் ''சிறியை எதிர்ப்போம், சிறையை நிறைப்போம்'' என்ற வெற்றுக்கோஷமாக எழுந்து பிசுபிசுத்துப்போன பின்பு இவர்கள் சாதித்ததெல்லாம் வடமாகாணத்திற்கு புதிய பஸ்வண்டிகள் அனுப்பப்படுவதை பல வருடங்கட்குத் தாமதித்தது மாத்திரமே. 1961 சத்தியாக்கிரகம் ஒருவிதமான கொள்கை வழிகாட்டலுமின்றி அவசர அவசரமாகத் தொடங்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் கச்சேரி வாசலில் பொலிசாரின் அத்துமீறலின் நினைவாகவே மக்களின் பெரும் ஆதரவைப் பெற்று வளர்ந்தது. அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டபின் எப்படிப் போராட்டத்தை தொடர்வது என்றே தெரியாமல் முழுப்போராட்டமும் ஸ்தம்பித்தது. அத்துடன் சத்தியாக்கிரகத்தின்போது வெளியிடப்பட்ட தமிழரசுத் பொற்தலைகளும் அஞ்சல் அட்டைகளும் இவர்கள் கேட்பது சமஷ்டியா தனிநாடா என்ற வாறான குழப்பத்துக்கே வழிகோலின. 1972இல் அரசியலமைப்புச் சட்டத்தைத் தீமூட்டி எரித்தபோது மக்கள் இவர்கள் ஏதோ சட்டவிரோதமான போராட்டத்தில் இறங்குகிறார்கள் என்று நம்பினர். ஆனால் சட்டத்துறையினரின் ஆதிக்கத்திலிருந்த தமிழரசு அதிகாரபீடம் அரசியலமைப்புச் சட்டத்தை தீமூட்டி எரிப்பது சட்டவிரோதமான செயலல்ல என்று நன்கு அறிந்தே அந்த நடவடிக்கையில் ஈடுபட்டது என்பதை அனேகர் உணரவில்லை. இவ்வாறு, 1956 முதல் இன்று வரை, அரசியல் பம்மாத்து வேலைகளைப் போராட்டங்களாகக் காட்டுவதிலேயே தமிழரசுக்கட்சியும் அதன் வாரிசுகளான த. ஐ. மு யும் த. வி. கூ யும் அக்கறை காட்டின.

பேச்சுவார்த்தைகளால் பிரச்சனைகளைத் தீர்க்கும் முயற்சிகளில் தமிழரசுக் கட்சியினர் கணிசமான தூரம் கவனம் எடுத்தனர். இதனால் 1958ல் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை உருவானது. இது கிழித்தெறியப்பட முக்கிய காரணம் யூ, என். பி. யும் அதன் முக்கியஸ்தர்களுள் ஒருவரான ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் மேற்கொண்ட எதிர்ப்புப் பிரசாரமே. ஆயினும் சிறீ எதிர்ப்புப் போராட்டமும், இவர்களது வீரமுழக்கங்களும் தமிழரசு என்ற கட்சிப்பெயரும் (ஆங்கிலத்தில் சமஷ்டிக்கட்சி!) சிங்கள மக்கள் மத்தியில் எழுப்பிய சந்தேக உணர்வுகளும் யூ. என். பி.யின் பிரசாரத்துக்கு உதவியதோடு 1958 இனக்கலவரத்தை முந்தி ஆரம்பித்த தமிழ் எழுத்துக்கட்கு 'தார்பூசும் இயக்கத்துக்கும்' வசதியான 'நியாயங்களை' ஏற்படுத்தின. 1958 இனக்கலவரத்தில் யூ. என். பி. யின் குண்டர் படைகள் கணிசமான பங்குவகித்தபோதும் அதில் பலவாறான சிங்கள இனவெறியர்கட்கும் பங்கு இருந்தது. எனினும் இனவெறியர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தயக்கமின்றிச் செயற்பட்டது. 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலை அடுத்து யூ. என். பி. சிறுபான்மை அரசாங்கம் அமைத்தபோது தமிழரசுக் கட்சி அதில் பங்குபற்ற மறுத்ததால் 1960 ஜுன் தேர்தலின்போது யூ. என். பி. மிகவும் விஷமத்தனமான இனவாதம் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. தமிழரசுக் கட்சிக்கும் ஸ்ரீ ல. சு, கட்சிக்கும் இரகசிய உடன்படிக்கை இருப்பதாகவும் இலங்கையைப் பிரிக்கும் சதியில் இரண்டு கட்சிகளும் பங்குபற்றுவதாகவும் செய்யப்பட்ட பிரச்சாரத்தையும் மீறி யூ. என், பி. படுதோல்வி கண்டது. இக்காலத்தினுள் தமிழரசுக் கட்சிக்கும் ஸ்ரீ ல. சு. கட்சிக்கும் இடையே உருவாகி இருந்த நல்லெண்ணம் மொழி மற்றும் தமிழ் மக்களது பிற பிரச்சனைகட்கும் ஒரு சுமுகமான தீர்வைக்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆயினும் தமிழரசுக்கட்சி இவ்வாய்ப்பைத் தவறவிட்டது மட்டுமன்றித் துர்ப்பிரயோகமும் செய்தது என்பது கவனிக்கத்தக்கது. 1961இல், ஸ்ரீ ல. சு. க. அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் பெருவாரியான அம்சங்களில் உடன்பாடு காணப்பட்டு, வேறுபாடான விஷயங்கள்பற்றி மீண்டும் கலந்தாலோசனை செய்யலாம் என்றவாறான நிலையில், ஒருவித முன்னெச்சரிக்கையுமின்றி, சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு அரசியல் சூதாட்டமாக மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகத்தின் தோல்வி இவர்களது எதிர்காலப் போராட்ட வாய்ப்புக்களையும் முற்றாக நசுக்கிவிட்டது. 1961 முதல் 1964 வரை இவர்களது பாராளுமன்ற அரசியல் படிப்படியாக யூ. என். பி.யை நோக்கியே இவர்களை நகர்த்தியது தற்செயலானதல்ல. 1950ல் தமிழ்க் காங்கிரஸின் வீழ்ச்சி ஏறத்தாழ முழுமையடைந்தது. இதை அடுத்து தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களாக இருந்த உயர்வர்க்க, வணிக பிரமுகர்கள் தமிழரசுக் கட்சியினுள் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தனர். 1960களில் இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மொழிவாரித் தொழிற்சங்கங்கள் பல பிரபல தமிழ் வணிகர்கள் பலரின் நிதி ஆதரவுடனேயே செயற்பட்டன. (அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் போன்ற சில இதற்கு விதிவிலக்கானவை என்பது குறிப்பிடப்பட வேண்டும்). 1956இல் தமிழரசுக்கட்சி ஸ்ரீ ல. சு. கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும், தேசிய மொழிப்பற்று, தேசிய முதலாளித்துவம், நடுத்தர வர்க்கத்தின் கீழ்ப்பிரிவுகளின் எதிர்பார்ப்புக்கள் ஆகிய பண்புகளைப் பிரதிபலித்த அளவில் மேலோட்டமான ஒற்றுமையைக் கொண்டிருந்தன. (யூ. என். பி.யும் தமிழ்க் காங்கிரசும் இவற்றுக்கு மாறானவையாயும் பழமைபிற்போக்கு சக்திகளது பிரதிநிதிகளாயும் அமைந்தன). தமிழ்க் காங்கிரஸ் பலமிழந்த சூழ்நிலையும், இனவாத அரசியலின் வளர்ச்சியும் தமிழரசுக் கட்சியின் தன்மையை மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தன. முன்னைநாள் தமிழ் யூ. என். பி. தூண்களும் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களான முதலாளிகளும் பிரமுகர்களும் மெல்ல மெல்லத் தமிழரசுக் கட்சியுடன் செல்வாக்குடையவர்களாக மாறினார்கள். கொழும்புவாழ் தமிழ்ப் பிரமுகர்கள் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் கூடிய பங்கு வகிக்க ஆரம்பித்தனர், தமிழ்க் காங்கிரஸின் 'துரைத்தனத்தை எதிர்த்த தமிழரசுக் கட்சியில் புதிய 'துரைத்தனம்' உருவாகி வளர்ந்தது. இதன் ஒரு பிரதிபலிப்பாக 1964இல் ஸ்ரீ. ல. சு. க. யிலிருந்து சீ. பி. டி. சில்வா குழுவினர் வெளியேறியதை அடுத்து பாராளுமன்றத்தில் லேக்ஹவுஸ் தேசிமயச் சட்டத்தின் வாக்கெடுப்பில் ஸ்ரீ. ல. சு, க. அரசாங்கத்தின் தோல்விக்கு தமிழரசுக் கட்சியும் பங்களித்தது. 1965 முற்பகுதியில் ஸ்ரீ. ல. சு. கட்சியை ஆட்சியில் தொடரவைக்க எடுக்கப்பட்ட முயற்சிகட்கு ஆதரவு தருவதாகப் போக்குக் காட்டிய தமிழரசுக்கட்சி இறுதி நேரத்தில் காலைவாரிவிட்டது. இதன் விளைவாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பதில் தாமதங் காட்டப்பட்டது. இதைத் திரித்து, ஸ்ரீ. ல. சு. கட்சி தேர்தலை நடத்தத் தயக்கம் காட்டுவதாக யூ. என். பி. பிரசாரம் செய்தது. இதுவும் இடதுசாரிக் கட்சிகளில் ஏற்பட்ட பிளவுகளும் யூ. என். பி. 1965 தேர்தலில் ஆட்சிக்கு வர உதவின. 1965 தேர்தலில் மறைமுகமாக யூ. என். பி.யை ஆதரித்த தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சி வரும் வரை அரசாங்கத்தில் பதவி ஏற்கமாட்டோம் என்ற வாக்குறுதியை மீறி யூ. என். பி. யுடன் கூட்டரசாங்கம் அமைத்ததோடு, கொழும்புக் கனவானான திருச்செல்வத்தை செனட்டராக்கி மந்திரிப் பதவியில் அமர்த்தினர். 1960 — 1965 கால இடைவெளியில் தமிழரசுக்கட்சியின் செயல்களால் ஏற்பட்ட சினமும் தேர்தலில் தோல்வியால் ஏற்பட்ட விரக்தியும் ஸ்ரீ. ல, சு. கட்சியை மட்டுமன்றி அதன் கூட்டாளிகளான பாராளுமன்ற இடதுசாரிகள் சிலரையும் 1966இல் டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கை மீதான தமிழ்மொழிச் சட்டத் திருத்தத்திற்கு எதிராகச் செயற்படவும் 1965இல் பாராளுமன்றத்தில் இனவாதக் கூச்சலிடவும் தூண்டின. இனவாதச் செயல்களும் உரைகளும் எவ்வகையிலும் நியாயப்படுத்தத்தக்கன அல்ல; ஆயினும் இவற்றுக்குத் தமிழரசுக் கட்சித் தலைமையின் செயல்கள் செலுத்திய பங்கை மறப்பது இச் சம்பவங்களின் முழுமையான பின்னணியை மறைப்பதாகும். தமிழ் மக்களின் பிரச்சனைகளை வைத்தே தேர்தல்களை வென்ற தமிழரசுக் கட்சி யூ. என். பி. யுடன் கூட்டுச் சேர்ந்தமை தமிழ் மக்களைக் கவரவில்லை. எனவே இவர்களது செல்வாக்கு தேய ஆரம்பித்தது. அடுத்த தேர்தலை முன்னிட்டு யூ. என். பி. அரசினின்று அவசர அவசரலாக விலகிய தமிழரசுக் கட்சியினர் முதல்முறையாக 1970 தேர்தலில் தாம் பெற்ற வாக்குகளில் விகிதாசார வீழ்ச்சியைக் கண்டனர். திரு. அமிர்தலிங்கத்தின் தோல்வி தமிழரசுக் கட்சித் தலைமைக்கு ஒரு சாட்டையடியாக அமைந்தது, 1970 தேர்தல் தமிழரசுக் கட்சியைவிட வேறு கட்சி இல்லாத நிர்ப்பந்தத்தாலேயே தமிழ்மக்கள் அவர்களுக்கு வாக்களித்ததையும் எதிர்த்துப் போட்டியிட்ட எவரேனும் போதிய தனிப்பட்ட செல்வாக்குடையவராக இருந்தபோது அவர் கணிசமான ஆதரவு பெற்றதையுமே காட்டியது. இதன் பாடங்கள் தமிழரசுக் கட்சிக்கும் போராட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தியது. ஆயினும் யூ. என். பி, யுடன் ஏற்படுத்திக்கொண்ட வர்க்க ஐக்கியத்திலின்று பிரிவது இயலாத காரியமாகிவிட்டது. 1970இல் தரப்படுத்தல் தமிழரசுக்கட்சிக்கு ஒரு வரப்பிரசாதமாகியது. ஆயினும் சட்டரீதியான எந்தப் போராட்டத்தின் மூலமும் தீர்வுக்கு வழிகாட்ட இயலாததாலும் தமது பாராளுமன்ற அரசியல் பலவீனத்தாலும் வேறு தந்திரோபாயங்களைத் தேட அவசியம் ஏற்பட்டது. சட்டவிரோதமான வெகுஜனக் கிளர்ச்சிகட்குச் சாதகமான சூழ்நிலை இல்லாததோடு அதை வழிநடத்தும் வலிமையும் இல்லாததால் மாணவர் பேரவை போன்ற ஸ்தாபனங்கள்மூலம் சில்லறைக் கிளர்ச்சிகளைத் தூண்டவும் அதன் மூலம் ஒரு புதிய அரசியல் தளத்தை நிறுவவும் முற்பட்டனர். 1971 ஏப்ரல் கிளர்ச்சி பங்களாதேஷ் விடுதலைப் போராட்டமும் அதில் இந்தியாவின் தலையீடும், 1972இல் புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் தமிழ்மொழி உரிமைகள் சில மறுக்கப்பட்டமை போன்ற நிகழ்ச்சிகள் தமிழரசுக்குப் புதிய வாய்ப்புக்களைக் காட்டியது. சுதந்திரன் ஆசிரியர் குழு, அமிர்தலிங்கம், சந்திரகாசன் போன்றோர் மறைமுகமாகத் தனிநாடு பற்றிய கருத்துக்களை ஊக்குவிக்க கண்துடைப்பாக ஏதாவது சலுகைகளைப் பெறலாம் என்ற நப்பாசையும் இருந்தது. இதன் விளைவாக தேர்தலில் வெல்வதற்குப் பிரிவினைக் கொள்கையை வைத்துப் போட்டியிட்ட அதே சமயம் இரகசியமாக ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் அமிர்தலிங்கத்துக்கும் தொண்டமானுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் தென்னிலங்கைத் தமிழர்கள் 1977இல் யூ, என். பி.யை ஆதரிக்குமாறு தூண்டப்பட்டனர். (இந்த உடன்படிக்கை பற்றிய சந்தேகங்கள் நீண்டகாலமாக நிலவியபோதும் 1983இல் தொண்டமான் அவர்களேபாராளுமன்றத்தில் இதைமுதன்முறையாகப் பகிரங்கப்படுத்தினார்). 1977 தேர்தலை அடுத்து ஸ்ரீ. ல. சு. கட்சி ஆதரவாளர்கள்மீது வன்முறை கட்டவிழ்க்கப்பட்டபோது த. வி. கூட்டணி அதைப்பற்றி எதுவிதமான கரிசனையும் காட்டவில்லை, ஆயினும் 1 மாதத்திற்குள் தமிழர்கள்மீது யூ. என். பி. குண்டர்களால் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டபோது கூட்டணியின் முறைப்பாட்டுக்கு யூ. என். பி. அமைச்சர்கள் பச்சை இனவாதத்தையே பதிலாகத் தந்தனர். 1981இல் நடந்த இனவாதச் சம்பவங்களுக்கூட கூட்டணிக்கும் யூ. என். பி. யிடமிருந்து நியாயமான தீர்வுபற்றிய பிரமைகளைக் கலைக்கவில்லை. 1982இல் ஜனாதிபதி தேர்தலின்போதும் இவர்கள் வடக்கில் ஒருநிலை வகித்தனர். தெற்கிலிருந்த தமிழர்கள் ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கே வாக்களிக்குமாறு மறைமுறைமாகத் தூண்டப்பட்டனர். யூ. என். பி. யின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் 1983இல் பொதுத் தேர்தலுக்கு பதிலாக சர்வஜன வாக்கெடுப்புமூலம் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது மட்டுமே அரைமனதுடன் கூட்டணியினர் அதை எதிர்க்க முன்வந்தனர். வெள்ளம் வடிந்தபின் கட்டப்பட்ட பாதி அணைக்கட்டைப்போல

### ஜி. ஜி. 50க்கு 50 கேட்டார் தமிழரசு சமஷ்டி கேட்டது

### யூ. என். பி - தமிழர் தலைமை ஐக்கியம் இடதுசாரிகளை எதிர்ப்பதில் மும்மரம்

ஆரம்பித்தனர். அதேசமயம் இவர்களால் ஊக்குவிக்கப்பட்ட வாலிப சக்திகள் இவர்களால் கட்டுப்படுத்த இயலாத வேகத்தில் தீவிரவாத இயக்கங்களாக வளரத் தொடங்கின. 1974இல் தமிழர் ஐக்கிய முன்னணி உருவானபோது பிரிவினைக் கருத்தும் பகிரங்கமாகவே முன்வைக்கப்பட்டது. (இதை மேலும் ஊக்குவித்த காரணிகளில் பேசாலையில் எண்ணெய்வளம் இருக்கிறது என்ற நம்பிக்கையும் உள்ளடங்கும்) த. ஐ. மு. தமிழரசுக் கட்சியினரால் உருவாக்கப்பட்டபோது) அதில் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் தொண்டமானும் மட்டுமன்றி தேவநாயகம் போன்ற யூ. என். பி. பிரமுகர்களும் சேர்ந்தமை அது உருவாக்கப்பட்டதன் பிற நோக்கங்களையும் புலனாக்குகிறது. 1976இல த. ஐ. முன்னணி த. வி. கூட்டணியாக மாறியதன் நோக்கம் 1977இல் தெளிவாகியது. ஒருபுறம் தமிழரசுக் கட்சியினர் ஊக்குவித்ததாலும் தரப்படுத்தல், அரசாங்க வேலைவாய்ப்புக்களில் பஞ்சம் போன்ற விரக்திகரும் சூழ்நிலைகளாலும், தீர்வுக்கு வழி தெரியாததாலும் இளைஞர் மத்தியில் வளர்ந்துவந்த தீவிர இயக்கங்கள் தமிழரசுக்கட்சிக்கு ஒரு சவாலாக வளரும் ஆபத்து இருந்தது. மறுபுறம் தமிழ் மக்களுக்கு முன் சமர்ப்பிக்கக்கூடிய புதிய கொள்கைகளோ போராட்ட மார்க்கமோ இல்லாமல் அடுத்த தேர்தலில் வெல்வது அசாத்தியம் என்று தெளிவாகிவிட்டது, அதே சமயம் யூ. என். பி, யின் துணையுடன் எப்படியாவது மாணவர்களது பல்கலைக் கழக அனுமதிப் பிரச்சனையைத் தீர்த்துவிடுவதோடு

### பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கு இடதுசாரிகள் பலியாகினர்.

(6ம் பக்கம் பார்க்க)

# இந்தியக் கிராமம் ஒன்றில் இடம்பெற்ற ஒரு கொடூரம்!

## புண்ணிய பூமியில் தொடரும் சோகக் கதைகள்

''இலஸ்ரேடட் வீக்கிலி ஒவ் இந்தியா'' என்ற ஆங்கில சஞ்சிகையில் 'மிலேசத்தனமான அறுவடை' என்னும் தலைப்பில் ருப்பாய் பூதோகரன் எழுதிய கட்டுரையின் சுருக்கத்தை இங்கே தருகின்றோம். பழம்பெரும் புண்ணிய பூமி என்று அழைக்கப்படும் இந்தியாவில் இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கும் கொடூரங்களில் ஒன்றையே இக்கட்டுரை தொட்டுக் காட்டுகின்றது.

(ஆ-ர்)

அது 1986 ஜனவரி 25ம் திகதி. ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் விளையாட்டை அவுஸ்திரேலியாவிலிருந்து நேரடி ஒளிபரப்பின்மூலம் நாட்டு மக்கள் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கின்றனர். அரசாங்கமோ குடியரசு தினத்திற்கான தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

அதே சமயம் குஜாரத்தில் கோலாணுவில் ஒரு கொடூரமான நிஜ நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'உயர்' சாதியினர் எனப்பட்ட ராஜ்புட் பெரிய கும்பல் ஒன்று தாழ்ந்த சாதியினரான வன்காவஸ் கிராமத்தை முற்றுகை இடுகிறது. அவர்கள் தடிகள், இரும்புக் கம்பிகள், கத்திகள், கோடரிகள், துவக்குகள் சகிதம் ஆயுதபாணிகளாய் உள்ளனர். வெளிச்செல்லும் பாதைகள் மூடப்பட்டு காவல் காக்கப்படுகிறது. கொலைகாரர் ஒழுங்கைகள் ஊடாக ஓடுகின்றனர், சத்தமிடுகின்றனர், வானத்தை நோக்கி சுடுகின்றனர். பீதியுற்ற வான்கர் சமூகத்தினர் தத்தம் இல்லத்தில் பதுங்குகின்றனர். இதற்கிடையில் ஆண்கள் நையப் புடைக்கப்பட்டனர். இரண்டு தேடும் கோஷ்டிகள் துவக்குகளுடன் சமூகத்தின் இனத் தலைவர்களைத் தேடும் முயற்சியில் மட்டும் கவனம் செலுத்துகின்றன. போசா கலா முதலாவது குறி. கற்ற திறமை மிக்க தலைவன். சார்பன்ச் தேர்தலில் போட்டியிடுதற்கு முன்வந்தவன். தனது குடும்பத்தாருடன் வீட்டைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருக்கிறான். கொலைகாரர் கதவை உடைப்பதற்கு கொடுவாக் கத்திகளை உபயோகிக்கின்றனர். பலம்மிக்க கதவுகள் தின்று பிடிக்கின்றன. கூரைக்கு மேலே ஏறி ஓடுகளை அகற்றி தகரசீட்டுகளை திறக்கின்றனர். போசாவின் 20 வயது மகன் பிரபுதாஸ் தந்தையைத் தப்பிப்போகுமாறு மன்றாடுகிறான். கொலைகாரர் கூரையைப் பிய்த்துக்கொண்டிருக்கும்போது போசா கதவைத் திறந்து ஓடுகிறான். அவனைத் துரத்திப் பிடிக்குமுன் பிரபுதாசும் பின்புறவால் ஓடி வேறு ஒரு வீட்டில் புகுந்து கதவைப் பூட்டிக்கொள்கிறான். கொலைகாரர் அவனைத் தொடர்கின்றனர். அந்த வீட்டு பெண் கெஞ்சுகிறாள். துப்பாக்கி வேட்டைக்காரர் இளைஞனை ஒரு மூலைக்குள் காண்கின்றனர். ஐந்து வேட்டுக்கள் ''பொயண்ட் பிளாங்'' நேரடியாக அவன்மீது தீர்க்கப்படுகின்றன. பிரபுதாஸ் தந்தையைக் காப்பாற்றித் தன் உயிரைக் கொடுக்கிறான். ''நான் ஒரு நாயைக்கூட கொல்லமாட்டேன் பாவிகள் எனது மகனைக் கொன்றுவிட்டார்களே'' எனக் கதறுகிறார் அந்தத் தந்தை.

அடுத்த கோஷ்டி போசா புன்ஜா என்ற மற்றத் தலைவனைத் தேடித் திரிகின்றனர், நன்கு கற்ற அர்ப்பணித்த தலைவன்.

போசா புன்ஜா பல வருடங்களாக ஒரு விவசாய கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு உழைத்து வந்தான். அவன் தனது சகோதரனின் வீட்டிற்குள் இருந்தான். கதவுகள் விட்டுக்கொடுக்க அவன் கூரைக்குப் பக்கத்து சுவர் துவாரத்தினூடாக வெளியில் குதிக்கிறான். குதிக்கும்போது காயமேற்படுகிறது... ஆனால் ஒரு வக்கிரியன் வீட்டிற்கு இழுத்துக்கொண்டு போகிறான். துப்பாக்கிகாரர் அவனைப் பின்தொடர்ந்து சென்று வீட்டு விறுந்தையில் பிடித்து முதுகில் சுடுகிறார்கள்.

கொலைகாரர் தமது கைங்கரியத்தை முடித்துக்கொண்டிருந்த வேளை ஏனையோர் கிராமத்தில் எஞ்சியிருந்த ஆண்களை அடித்துத் துன்புறுத்திக்கொண்டிருந்தனர். ஏற்கனவே காயத்துக்குள்ளான கணவனின்மீது ஒரு பெண் விழுகிறாள். அவளுக்கும் அடிபோட்டு தள்ளிவிட்டு அவனை அடித்துக் கொல்கிறார்கள்.

போசா கலா தப்பிவிட்டான் - துப்பாக்கிக்காரர் ஒரு உழவு யந்திரத்தில் அனுப்பப்பட்டு வயல்களிலும் அயல்

(7ம் பக்கம் பார்க்க)

## அன்றைய ஞாபகம்!

அன்று 66 ஐப்பசி மாதத்தின்
ஆரம்ப நாட்களில்
எனக்கு வயது இருபத்து மூன்று
அநீதிகளுக்கு எதிராய் எழுந்து
ஆழமான உணர்வுகள் பொங்கிய
அரசியல் வாழ்வின் ஆரம்ப நாட்கள்
சுன்னுகம் என்னும் உள்ளூர் நகரின்
சுறுசுறுப்பான சந்தையில் இருந்து
வீறுகொண்டெழுந்து வீச்சுடன் நடந்தது
ஊர்வலம் ஒன்று
அந்நாள் ஐப்பசி இருபத்தொன்று.
ஊர்வல முன்றலில் எழுந்த கோஷம்
அடிவரை சென்று ஆக்கிரோசமானது
செங் கொடிகள் எழுந்து திசையைக் காட்டின
செம் பதாகையொன்று முன்னே சென்றது
சாதியமைப்புத் தகரட்டும்
சமத்துவ நீதி ஓங்கட்டுமென்ற
பதாகையின் கோஷங்கள் பாரினை அதிர்க்க
உழைக்கும் கரங்கள் ஓங்கி உயர்ந்தன
ஊர்வலக் கண்கள் தீப்பொறி கக்கின.
ஊர்வலம் நகர்ந்த ஒருசில பொழுதில்
பாய்ந்தன காக்கிகள் ஊர்வலம் மீது
உரிமைகள் வேண்டுமா என்றவர் கேட்டு
கம்படி நடத்தின காக்கிச் சட்டைகள்
முன்னணித் தோழர்கள் மண்டைகள் பிளந்தன
இரத்தம் சிந்திட தலைவர்கள் தம்மை
இழுத்துச் சென்று காவலில் பூட்டினர்
கலைந்து போங்கள் இன்றேல் சுடுவோம்
கர்ஜனை செய்தனர் காக்கித் தலைவர்கள்
மக்கள் கூட்டம் மலைத்தா நின்றது.
அநீதியை எதிர்ப்பது எங்கள் கடமை
ஊர்வலம் செல்வது எமது உரிமை
உயிர்தான் போகிலும் ஊர்வலம் செல்வோம்
உறுதியாய் மக்கள் உரத்துக் கூறினர்
உரம்பெற்ற கைகளை ஒன்றுபட்டுயர்த்தினர்
அஞ்ஞல் காக்கிகள் இறுதியிற் பணிந்தனர்.
யாழ்நகர் நோக்கி நடந்தது ஊர்வலம்
முற்றவெளியில் கூட்டம் நிகழ்ந்தது
இடியும் மின்னலும் எதிரொலி கிளப்ப
கொட்டும் மழையின் குளிரினூடே
கொள்கை முழக்கம் பிரகடனமானது.
அடக்கி ஆள்வது ஆள்பவன் நியதி
எதிர்த்தும் போரிடல் மக்கள் கடமை
சாதி அமைப்பு தானே வீழாது
சமத்துவ நீதி தானே வராது
தாழ்த்தப்பட்ட மக்களே எழுவீர்
தளைகளை ஒழிக்க புறப்பட்டு வாரீர்
பொறுத்தது போதும் பொங்கி எழுவீர்
புரட்சிப் பாதையில் சேர்ந்தணி திரள்வீர்.
66 ஐப்பசித் திங்களில்
ஆக்கிய பாதை அகலத் திறந்தது
சாதிப்பேயை ஒழித்திட எண்ணிய
சகலரும் ஒன்றாய் திரண்டு எழுந்தனர்
அடக்கி ஒடுக்கப் பட்டவர் அனைவரும்
அணிதிரண்டனர் அலை அலையாக.
அடிமை குடிமை முறைகள் ஒழிய
ஆலய தேனீர்க் கடைகள் திறக்க
உரிமைக் கீதங்கள் ஓங்கி ஒலித்தன.
தமிழர் வாழும் நான்கு திக்கிலும்
தடதடவெனவே எழுந்தனர் மக்கள்
போராட்டங்கள் தொடர்ந்தன எங்கும்:
ஆயிரமாயிரம் ஆண்டுகளாக
அடங்கிக் கிடந்த அடக்கப்பட்டோர்
போர்முரசறைந்து பொங்கி எழுந்தனர்
போராட்டத் தீ எங்கும் பரவ
தீயின் நடுவே தியாகிகள் தோன்றினர்
இரத்தச் சுவடுகள் பதிந்த அப்பாதையில்
போராளிகளாய் மக்கள் மாறினர்
ஆண்கள் பெண்கள் முதியவர் இளைஞர்கள்
என்று எழுந்தது மக்கள் பெரும் திரள்
தமிழர் தலைமைதம் வர்க்கம் சார்ந்திட
ஆளும் வர்க்க அரசும் உதவியாய்
காவல் நாய்களை ஏவியே விட்டது.
உழைக்கும் கரங்கள் ஒன்றாய் இணைந்து
உருவாக்கிய வெகுஜனப் போரிலே
சாதிவெறியரும் சாதிமறவரும்
தூசாய் அங்கு தூள் தூளாகினர்
உதித்தன உரிமைகள் உண்மையாகவே
கிடைத்தன சமத்துவம் நேர்முறையாகவே.
இருபது வருடங்கள் நகர்ந்தன இன்று
அன்றைய எழுச்சிகள் புகட்டிய பாடம்
என்றும் எங்கள் நெஞ்சை விட்டகலா
அநுபவம் வெறுமனே உணர்ச்சிகள் அல்ல
வர்க்கப் போருக்கு வலுவான பாடம்.
அன்றைய நினைவுகள் என்றும் உறுதியாய்
நின்று எங்கள் நெஞ்சில் நிலைத்திட
இன்று எழுந்தான் இனவெறி அரக்கன்
குஞ்சு குழந்தைகள் குமருகள் தாய்மார்
வயோதிபர் வாலிபர் என்றே நாளும்
கொன்று ஒழிக்கும் கொடூர நிகழ்வுகள்
நின்ற பாடில்லை நிறுத்திட வேண்டில்
வெறியை வெறியால் வீழ்த்திடல் இயலா
வெகுஜனப் போரணி திரண்டிட வேண்டும்
கொலைவெறிப்படைகளின் கொடூரம் ஒழித்திட
கொதித்தெழவேண்டும் மக்கள் பெருந்திரள்.

- தர்மன்

## இனஒடுக்கலும்....

(5ம் பக்கத் தொடர்)

அமைந்த இந்த நடவடிக்கை கூட்டணியின் அரசியல் செல்வாக்கை மேலும் தேயச் செய்தது. வாக்குறுதியளித்தபடி சமாதான முறையில் தமிழ் ஈழத்தைப் பெற எதுவும் செய்யாமல் அதிகாரமற்ற மாவட்டசபைக்குமேல் எதையுமே சாதிக்க முடியாமையால் மக்கள் இவர்கள்மீது நம்பிக்கை இழந்தனர். (துரையப்பாவின் கொலை உட்பட) தமக்கு லாபகரமான அரசியல் வன்முறைகட்கு மறைமுக ஆதரவு தந்துவந்த இவர்களால் வாலிப இயக்கங்களின் தீவிரவாத வன்முறை கட்டுக்கடங்குவதை நிறுத்தமுடியவில்லை. 1977க்குப்பின், முக்கியமாக 1981ம் ஆண்டில் வடக்கில் நடந்த ராணுவ அட்டகாசத்தைத் தொடர்ந்து தீவிரவாத வாலிப இயக்கங்கள் கூட்டணிக்கு மாற்றுச் சக்திகளாக தம்மை வளர்த்துக்கொண்டனர். 1982இல் தீவிரவாதிகளுக்கு அஞ்சியே இவர்கள் செயற்படும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இதே காலகட்டத்தில் கூட்டணித் தலைமையுடன் ஏற்பட்ட மோதலால் கூட்டணியினின்று பிரிந்தோர் த.ஈ.வி. முன்னணியாக அமைந்தமை கூட்டணித் தலைமையை மேலும் பலவீனப்படுத்தியது. 1983 இனவாத வன்முறைச் சம்பவங்களை அடுத்த காலம் கூட்டணியின் கையாலாகாத்தனத்தை அப்படியே தோலுரித்துக் காட்டியது. இன்று கூட்டணியினர் பேரளவில் மட்டுமே மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகப் பவனி வருகின்றனர்.

ஒட்டு மொத்தமாகச் சொல்வதானால் தமிழரசுக் கட்சியும் அதன் வாரிசான கூட்டணியும் இலங்கையின் வரலாற்றில் பிற்போக்குச் சக்திகளையே ஆதரித்து வந்துள்ளன. தமிழ் மக்களை இலங்கையின் தேசிய அரசியலிலிருந்து தனிமைப்படுத்துவதில் தமிழ்த் தலைமை வகித்த பங்கு சிங்களப் பேரினவாதத்தின் நோக்கங்கட்கு மிகவும் வசதியாகவே அமைந்தது. வடக்கில் மட்டுமன்றி தேசிய ரீதியாகவும் இடதுசாரிகள் மீது தொடர்ச்சியாக இவர்கள் காட்டிய பகைமையும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் படுபிற்போக்கின் பிரதிநிதியான யூ.என்.பி.க்கு ஆதரவாகவே செயற்பட்டமையும் தென்னிலங்கையில் உள்ள ஏகாதிபத்திய விரோத முற்போக்குச் சக்திகளை பேரினவாத ஒடுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் நேச சக்திகளாக வென்றெடுக்கும் வாய்ப்புக்களை இழக்கச்செய்துவிட்டது. தமிழர்களது பாராளுமன்ற தலைமை, பிரதானமாக சுரண்டும் வர்க்க நலன்களையே சார்ந்து நின்றதால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களின் நியாயமான போராட்டங்களைத் தலைமை தாங்கி நெறிப்படுத்தும் வலிமையை என்றோ இழந்துவிட்டது.

தமிழ்ப் பிரதேசங்களின் பாராளுமன்ற அரசியல் தலைமையின் நடவடிக்கைகளை வர்க்க அடிப்படையில் ஆராய்வதன் மூலமே அதன் தவறுகளை நம்மாற் தெளிவாக இனங்காண முடியும். சிங்களப் பேரினவாதம் வளர்வதைச் சாத்தியமாக்கிய அரசியல் சூழ்நிலை, இடதுசாரி இயக்கத்தின் பிரச்சனைகள், பிற சிறுபான்மையினத்தவர்களது நிலை ஆகிய பலவற்றையும் சரிவர ஆராய்வதன் மூலமே இன்றைய நிலையைச் சரிவர அறியவும் இதனின்று மீள்வதற்கான ஒரு மார்க்கத்தையும் கண்டறிய முடியும்.

# அரசின் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டம் சரியான திசைமார்க்கத்தில் முன்னேறவேண்டும்!

## ஒக்ரோபர் 21 எழுச்சியின் 20வது நினைவாக சங்கானை - புத்தூர் - சில்லாலை - தெல்லிப்பளை கூட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தோழர்கள் ஆற்றிய உரைகளின் சுருக்கம்

இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்கள் கொடிய பேரினவாத வெறியாட்டத்திற்கு நாளாந்தம் பலியாகி வருகின்றனர். இப்பேரினவாதம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் படிப்படியான வளர்ச்சிபெற்று இன்றைய நிலைக்கு வந்த ஒன்றாகும். கடந்த காலத்தில் ஆட்சிப்பீடத்திற்கு வந்த சகல ஆட்சியாளர்களுமே இன அடிப்படையிலான புறக்கணிப்புக்களையும் பாகுபாடுகளையும் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தி வந்துள்ளனர். அது மட்டுமன்றி தமிழ் மக்களுக்காகக் கண்ணீர் வடிப்பதுபோல் நடந்து கொண்ட தமிழ்த் தலைவர்களும் இந்நாட்டு ஆளும் வர்க்கத்தினரோடு இணைந்திருந்தே இன்றைய நிலை தோன்றக் காரணமாகியும் இருந்தனர். ஆதலால் பேரினவாதம் இன்று ஏகாதிபத்திய முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளின் துணையுடனேயே நாசகாரச் செயல்களை நடாத்தி வருகின்றது. இத்தகைய ஒரு சூழலில் பேரினவாத வெறிக்கு எதிரான போராட்டம் சரியான திசையில் சரியான கொள்கைகளுடனும் நடைமுறைகளுடனும் முன்னெடுக்கப்படுவது அவசியம். இன்றேல் அழிவுகளும் அனர்த்தங்களும் அதிகரித்துச் செல்லும் அபாயமே கண்முன்னே தெரிகின்றது. எனவே பேரினவாதத்திற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் பல முனைகளிலும் பல வடிவங்களிலும் ஒன்றிணைக்கப்பட்ட உறுதியான கொள்கை அடிப்படையில் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். தமிழ் பேசும் மக்கள் தம்மை எதிர்நோக்கும் கொடிய அடக்கு முறைகளுக்கு எதிராகத் தாமே கிளர்ந்தெழுந்து அலைஅலையாக முன்செல்லும் புதிய நிலை உருவாக வேண்டும். வெகுஜன எழுச்சியும் ஆயுதம் தாங்கிய போராட்டமும் ஒன்றை ஒன்றுநிராகரிக்காதவகையில் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் முன்செல்லவேண்டும். அப்பொழுதுதான் பலம் வாய்ந்த பேரினவாத வெறிகொண்ட எதிரியைத் தோற்கடிக்க முடியும். நடைமுறை ரீதியில் பேரினவாதிகளையும் அவர்களது சுய ரூபத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் மூற்று முழுதாக அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவது அவசியம். அதற்கான கொள்கையும் நடைமுறையும் தமிழ் மக்களிடம் உருவாக வேண்டும். அதேபோல் போராட்டத் தந்திரோபாயங்களும் உரிய முறைகளில் மாற்றம் பெறவும் வேண்டும். இவ்வாறான நிலைக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகவும், செழுமைகொண்ட அனுபவங்களாகவும் சாதி அடக்குமுறைக்கு எதிரான 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதைத் தொடர்ந்த போராட்டங்களும் பயன் உள்ள படிப்பினைகளாகும். இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் மத்தியில் ஊறி உறுதி பெற்றிருந்த சாதி அடக்கு முறையை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்களால் வெற்றிகொள்ள முடிந்தது என்றால் சில பத்தாண்டுகளில் உருவாகி வளர்ந்து வந்த இனவெறிக்கு எதிரான போராட்டத்திலும் நிச்சயம் வெற்றிபெற முடியும். எவ்வகை அடக்குமுறையையும் எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறுவதற்கான அடிப்படை சரியான கொள்கை-சரியான தந்திரோபாயம் மக்களைச் சார்ந்து நிற்கும் வெகுஜனக் கோட்பாடு என்பவையேயாகும். எனவே நெருக்கடியும், அபாயமும் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் தமிழ்பேசும் மக்கள் 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியின் போராட்ட அனுபவங்கள் கற்றுத்தரும் வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் அணி திரள்வதும் முன்செல்வதும் அவசியமாகும்.

இவ்வாறு 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியின் 20வது ஆண்டு நினைவாக புத்தூர் வேம்பிராயில் நடைபெற்ற பகிரங்கப் பொதுக்கூட்டத்தில் தோழர் கே. செந்திவேல் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில் அன்றைய போராட்டம் நீதிக்கும் அநீதிக்கும் இடையான போராட்டமாகும். சாதி அடக்கு முறையால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கமே நீதி இருந்தது. சாதி வெறியர்களும் பொலிஸ் படையும் அநீதியின் பக்கம் இருந்தனர். அன்று நீதிக்காகப் போராட அலை அலையாக முன்வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி சரியான வழிகாட்டலையும் தலைமையையும் அளித்தது. அதனால் மக்கள் இழப்புக்கள் தியாகங்களின் ஊடே தமது உரிமைகளைப் பெற்று வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொண்டனர் என்றும் கூறினார்.

தோழர் சோ. தேவராஜா உரையாற்றுகையில் இன அடக்கு முறைக்கு எதிரான போராட்டம் தங்கு தடை இன்றி வளர்ந்து செல்லவேண்

(8ம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கிராமம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களிலும் அவனைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அது வெற்றியளிக்கவில்லை. கிராமத்தின் மறுபுறத்தில் பாதகர்களை காவல் காத்து நிற்கும் மாநில றிசேவ் பொலீசில் தஞ்சம் புகுகிறான்.

ஒரு வதந்தி பரவுகிறது. தூரத்து வயல்களில் வேலை செய்யும் வான்கார்களைக் கொல்வதற்கு கொலைகாரர் கோஷ்டி செல்லப்போகிறது. அவர்கள் இடத்தைவிட்டு ஓடுகிறார்கள். கொலைகாரர் உழவு யந்திரங்களில் ஏறிச்சென்று பிரிந்து செல்கின்றனர், அவர்களது 'பணி' நிறைவேற்றப்படுகிறது - அவர்கள் ஓடுவதற்குமுன் சில வீடுகள் தீயிடப்படுகின்றன, கிராமத்தில் பெண்களும், குழந்தைகளும் இறந்தவர்களுக்காகவும், காயப்பட்டவர்களுக்காகவும் அழுது புலம்புகின்றனர். ஏனையோர் பரவும் தீயை அணைக்க முற்படுகின்றனர். இந்த நாடகம் சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது. வான்கார் சாதியினருக்கு இது ஒரு முடிவில்லாத பயங்கரம். இன்றைய முடிவு - இருவர் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே மரணம். ஒருவர் கிராமத்திலேயே அடித்துக் கொல்லப்பட்டார். ஒருவர் மோசமாகப் புடைக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு போகும் வழியில் மரணம். 20 பேருக்கு தலையில் காயம், கைகால் முறிக்கப்பட்டது. இவர்களில் அறுவரின் நிலை மோசம். மூன்று வீடுகள் எரிந்து சாம்பரானது.

ஒரு காலத்தில் ராஜ்புட் தர்பார் கிராமங்களை ஆட்சி செலுத்தினர். சௌ ராஜ்ரா (ஒரு நூறு அரசுகள்) அரசர்களுடன் அவர்களுக்கிருந்து வந்த தொடர்பால் அதிகாரமும் அந்தஸ்துமிருந்தது. அவர்கள் கிராமத்தின மத்தியில் வசித்தனர், குதிரைமேல் சவாரி செய்தனர். தலைப்பாகை அணிந்து வாள் கொண்டு சென்றனர். குறைந்த சாதியினரெனப்பட்ட ஏனைய கிராமத்தவர் தலைவணங்கினர் - பயப்பட்டனர். நிலம் தரம் குறைந்தது ஆனால் வெகுவாக இருந்தது - சொத்தடிமை இருந்ததால் நிலத்தை பண்படுத்தவும் சிற்றேவலுக்கும் ஆட்கள் ஏராளம் இருந்தனர் - ராஜ்புட்களுக்கு வாழ்க்கை சுலபமாயிருந்தது,

குறைந்த சாதியினர் சுற்றிவர இருந்தவேளை - தீண்டத் தகாதவர்கள் அதற்கப்பால் இருந்தனர். பின்னையவர் தமது கழுத்தில் துப்பற் படிக்கம் கட்டித் தூங்கவிட்டு பின்புறம் விளக்குமாறு கட்டிக்கொண்டே கிராமத்திற்குள் பிரவேசிக்க முடியும். அல்லாவிடில் பூமி மாசுபட்டு விடும், கிராமத்துள் புகும் போது பாதணிகளை கழட்டினர். அவர்களின் பெண்கள் ராஜ்புட்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தனர். அதற்கு தீண்டாமை பார்க்கப்படுவதில்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் அரசர்கள் ஸ்தலப் பிரமுகர்கள் ஆனார்கள். பால் கிராமத்தில் ராஜ்புட்டின் ஆட்சி சிறிது மாற்றத்திற்கு மட்டுமே உள்ளானது. துப்பற் படிக்கங்களும், விளக்குமாறும் மறைந்தன. ஏனையவை அப்படியே இருந்தன. குறிப்பாக வான்காரர்களைப் பொறுத்தமட்டில் 20ம் நூற்றுண்டு ஓரளவு மாற்றத்தைக் கொண்டுவந்தது, தொழிலைப் பொறுத்த மட்டில் நெய்தல் அவர்களின் வேலை — தீண்டத் தகாதவர்கள். துணி ஆலைகள் அவர்களை விவசாயக் கூலியாக்கியது — ராஜ்புட்களின் பிணைப்புடன். கடினஉழைப்பாளர்களான அவர்கள் விவசாயத்தைத் தமது தொழிலாகத் தேர்ந்து கொண்டனர். மிகவும் சுலபமாகத் தம்மைச் சூழ் நிலைக்கேற்ப மாற்றிக்கொண்டனர். சிலர் காணிகளைக் குத்தகைக்கு எடுத்தனர். ஒரு சிலர் அனேகமாக பண்படுத்த முடியாத காணிகளையும் வாங்கிக் கொண்டனர். ராஜ்புட்களுக்கு தொடர்ந்தும் குறைந்த கூலிக்கு வேலை செய்து வந்தனர். பிரயோசனமற்ற காணி உடமை அவர்களை மேலும் கடன்காரராக்கியது.

சுதந்திரம் மேலும் மாற்றங்களை கொண்டு வந்தது. வான்கார் சமூகத்தவர் மேலும் காணிகளை வாங்கினர், சிலர் காணிச் சீர்திருத்தம் மூலமாக பெற்றனர். 1960களில் கல்வி மெதுவாக பரவத் தொடங்கியது. சில வான்கார் தொழில் பெற்று கிராமத்தைவிட்டு வெளியே சென்றனர். ராஜ்புட்கள் கிராமத்து பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்தும் வைத்திருந்தனர். தொழில்கொள்வோராகவும் — பணம் வட்டிக்கு கொடுப்பவர்களாகவும் விளங்கினர். பரம்பரைத் தலைவர்கள் மூலமாகத் தாழந்த சமூகத்தவர்களை தம் கட்டுப்பட்டில் வைத்திருந்தனர். மிரட்டல் இடைக்கிடை பலாத்காரப் பிரயோகம் ஏனையவர்களையும் கவனத்தில் வைத்தது.

> "இந்த நாட்டில் சுதந்திரப் பிரஜைகளாக வாழ்வதற்கு எமக்கு உரிமை உண்டா? என்பதை மட்டும் சொல்லுங்கள்" வன்கார் சமூகத்தவர்கள் குஜராத் முதலமைச்சரைப் பார்த்து இக்கேள்வி எழுப்பினர்.

எழுபதின் நடுப்பகுதியில் பால் கிராமங்கள் சில வான்கார் விவசாய கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டன. இந்தச் சங்கங்கள் அரசாங்கத்திடமிருந்து தரிசு நிலங்களையும் காணி உச்சவரம்பு சட்டத்தின்கீழ் மேலதிகமாய் வந்த காணிகளையும் கொள்வனவு செய்தன, அரசாங்கம் வகுத்த ஊதியத்தில் வான்கார் சமூகத்தவருக்கு தொழில் கிடைக்க வசதி ஏற்பட்டது. சாடலி ரூபா 6/- இலிருந்து ரூபா 10/50 வரை சென்றது. வருடம் பூராவும் தொழில் மூலம் கடன்பழு குறைந்தது. இந்தச் சங்கங்கள் வான்கார் சமூகத்தவரிடையே ஒருவித ஐக்கிய உணர்வை ஏற்படுத்தியது, இது ஒடுக்கப்பட்ட அவர்களது நிலையை உணரச் செய்தது. புதிய தலைவர்கள் தோன்றினர்.

ராஜ்புட்கள் பீதிகொண்டனர்; பழைய அமைப்பு மாறுகிறது. அதை எவ்வாறாயினும் நிலைநிறுத்த உறுதிபூண்டனர். தாழ்ந்த சமூகத்தினரை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டனர். பரம்பரைத் தலைவர்களை நிர்ப்பந்தம் செய்து மக்களின் ஐக்கியத்தை குலைக்கும் முயற்சி செய்யப்பட்டது. சதித்திட்டங்கள் தோல்வியடையவே ராஜ்புட்கள் யுத்தப் பிரகடனம் செய்தனர்.

இந்தக் கோரச் சம்பவத்தினத்திற்கு முன் ராஜ்புட்கள் ஒரு சில ஹரிஜனங்களைத் தூண்டி வான்கார் சமூகத்தாருக்கு கொடுத்த காணியில் குடிசைபோட வைத்தனர். சண்டை மூண்டது. ஜனவரி 25ல் வான்கார் சமூகத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனுக்கு இந்த மோதலில் விரல்கள் வெட்டப்பட்டன. வான்கார் பொலீசில் முறைப்பாடு செய்யத் தீர்மானித்தனர்.

200 வான்கார் சமூகத்தவர் அவ்வழிகளால் சென்ற ஒரு ரக்வண்டியில் செல்லும் நோக்குடன் கட்டணத்தை பேரம் பேசிக்கொண்டிருந்த சமயம். பலர் அதில் ஏறியிருந்தனர் அவ்விடம்வந்த ஆயுதபாணிகளான ராஜ்புட்கள் இவர்களை இழுத்து வீழ்த்தி அடிக்கத் தொடங்கினர். பெரும்பாலான வான்கார் சமூகத்தவர் பாதுகாப்புத் தேடி ஓடினர். திட்டமிட்ட கோர வன்செயல் ஆரம்பமானது,

குஜாராத்தின் முதலமைச்சர் அமர்சின் சௌத்திரி இக்கோரச் சம்பவத்திற்குப் பின் கோலனுவுக்கு விஜயம் செய்த போது வான்கார் சமூகத்தவர் ஒரே ஒரு கேள்வி மட்டுமே அவரிடம் கேட்டனர்.

''இந்நாட்டில் சுதந்திர பிரஜைகளாக வாழ்வதற்கு எமக்கு உரிமையுண்டா'' என்பதை மட்டும் சொல்லுங்கள்.

38 வருட சுதந்திரத்தின் பின் இந்தக் கேள்வி கேட்கப்படுகின்றதென்றால் அந்தச் 'சுதந்திர' இந்தியா யாரின் கைகளில் இருக்கிறது என்பது புலனாகும்.

# கிழக்கு மாகாணம் துண்டாடப்பட்டால்

# பாரம்பரிய பிரதேசம் சிதைக்கப்படும்

இனப் பிரச்சினையின் தீர்வுக்கென இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையில் வடக்கு கிழக்கு இணைப்பு என்ற பிரச்சினை பெரும் விவாதத்தைக் கிளப்பி இருக்கிறது. இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என அரசு பிடிவாதம் செய்கிறது. இணைப்பு இல்லாவிட்டால் பேச்சுவார்த்தையே இல்லை என தமிழர் பிரதிநிதிகள் அடித்துக் கூறுகின்றனர். இந்நிலையில் முன்வைக்கப்பட்ட புதிய யோசனையே கிழக்கு மாகாணத்தை மூன்ருகத் துண்டாடும் திட்டமாகும். அவ்வாறு துண்டாடப்படும் கிழக்கு தமிழ், முஸ்லீம், சிங்கள மாகாண சபைகளாகும் என அரசின் ஆலோசனை கூறுகிறது. தமிழருக்கு மட்டக்களப்பு மாகாணமும், முஸ்லிம்களுக்கு அம்பாறை மாகாணமும், சிங்களவருக்கு திருகோணமலை மாகாணமும் உருவாக்கப்படுமாம்.

தமிழர் பிரச்சினையில் பிரதான அடிப்படையே அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் அபகரிக்கப்பட்டமையாகக் காணப்படுகின்றது, அதிலும் 77க்கும் பின் திட்டமிட்ட ஆயுதப் பயிற்சி பாதுகாப்புடன் நில அபகரிப்பிற்காக குடியேற்றப்பட்ட சிங்கள குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை கணிசமானதாகும். அதனுலேயே ஜே. ஆர். பெங்களூர் பேச்சின்போது 1981ம் ஆண்டு குடிசனப் பரம்பலின் அடிப்படையில் மூன்று பகுதிகளாகக் கிழக்கு மாகாணம் துண்டாடப்படுவதை முன்வைத்தார். இத் துண்டாடும் கொள்கை கிழக்கின் தமிழ், முஸ்லீம் மக்களால் எதிர்க்கப்படுகின்றன. சமரசத்திற்கு முன்நிற்கும் இந்தியாவும் கிழக்கு மாகாணத்தை துண்டுபோடுதலுக்கு உடந்தையாக உள்ளதா? என்றும் ஐயமும் தோன்றியுள்ளது.

தமிழர்களுக்கென ஒரு பாரம்பரிய பிரதேசம் இல்லை என வாதிட்டுவரும் ஜே. ஆர். கிழக்கைத் துண்டுபோடுவதன் மூலம் தனது நிலையை நிலை நாட்டிக்கொள்ள முயல்வதன் வெளிப்பாடே கிழக்கைப் பிரிக்கத் தயார்படுத்துவதாகும்.

எனவே தமிழ் முஸ்லீம் மக்கள் இவ்விடயத்தில் ஆழ்ந்து சிந்திப்பதும் எதிர் காலத்தில் நிகழ இருக்கும் விளைவுகளைக் கூர்ந்து நோக்கி முடிவுகளுக்கு வருவதும் அவசியம். மொழியாலும், பிரதேசத்தாலும் நீண்டகால வாழ்வாலும் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லீம் மக்கள் மாகாண சபைக்காக கிழக்கு துண்டாடப்படுவதை ஏற்றுக்கொள்வது நியாயமானது அல்ல. அதேவேளை இத்துண்டாடல் இல்லாமல் - தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை இழக்காமல் எதிர்காலத்தில் அபகரிப்புகளுக்கு இடம்வைக்காத வகையில் தீர்வுக்கான யோசனைகள் முன்வைக்கப்படல் வேண்டும். இதில் அரசு தன் நிலையில் விட்டுக் கொடுத்து தீர்வுகாண முன்வரல் வேண்டும். ★

## இலங்கை மற்ருெரு லெபனுன்?

இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாகத் தமிழ் இளைஞர்களிடையே தீவிரவாதம் எழுந்தது. அதற்குப் பதிலடி கொடுக்க ஜே. ஆர். அமெரிக்க ஆலோசனையை நாடினுர். அமெரிக்கா தனது அடிஆள் நாடான இஸ்ரேலை ஜே. ஆருக்கு கைப்பிடித்துக் கொடுத்தது. பிசாசுடனும் கூடுவேன் என்று கூறிய ஜே. ஆர். இஸ்ரேலின் கூட்டாளி ஆனுர். அதன் விளைவு தினக்கொலையும், இரத்த வெள்ளமும் தேங்கி நிற்கும் நாடாக இலங்கை மாற்றப்பட்டது. நலன்காக்கும் பிரிவு வந்தது, வர்த்தகம் ஆரம்பமாகியது. ஆயுதங்கள், ஆலோசகர்கள், பயிற்சியாளர் ஆயுதப் படைகளில் முக்கிய இடம் வகிக்கின்றனர். தூதரகம் விரைவில் திறக்கப்படுமாம். இஸ்ரேல் ஜனதிபதி வந்துபோய் உள்ளார். அண்மையில் பாராளுமன்றக் கலரியில் இஸ்ரேலியர்கள் பகிரங்கமாகவே இருந்து பேச்சுக்களைக் குறிப்பெடுத்துள்ளனர். ஆயுதப் படையில் மட்டுமன்றி அரசியல் விவகாரங்களிலும் இஸ்ரேலியர்கள் பங்கு கொண்டு வருகின்றனர். இதன் மொத்த விளைவு இலங்கை மற்ருெரு லெபனுன் ஆக்கப்படும். தான் செய்ய முடியாததை அமெரிக்காவு - சி. ஐ. ஏயும் தனது அடி ஆளான இஸ்ரேல் மூலம் செய்து வருகிறது. இதற்குப் பலியாகுவது முழு இலங்கை மக்களுமேயாவர்.

## விஜிதரன் எங்கே?

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் - இளைஞர்கள் மோசமான பேரினவாத ஆட்சிக்கு எதிராகப் போராடும்போது அவர்களிடையே உண்மையான ஜனநாயக கருத்துக்களுக்கு இடமளிக்கவேண்டும். உண்மைகளையும், சரியானவற்றையும் சுட்டிக்காட்டும் விமர்சன உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் போராட்டம் சரியான வழியில் அரசுக்கு எதிரானதாக அமைய முடியும்.

எனவே விஜிதரன் மறைவு கண்டுபிடிக்கப்பட வேண்டும். அது தமிழ் மக்களின் ஐக்கியத்திற்கும் நம்பிக்கைக்கும் போராட்ட முன்னெடுப்பிற்கும் அவசியமானதொன்ருகும், இதைவிடுத்து ஒரு விஜிதரன் தானே போனுல் போகட்டுமே என்று கூறுவது மறைவை மேலும் மறைத்து அதை நியாயப்படுத்தும் செயலாகவே இருக்க முடியும். விஜிதரன் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அதற்கு சகல முயற்சிகளும் செய்யப்படவேண்டும் என்ற யாழ் - பல்கலைக்கழக நிர்வாகத்தினதும் . மாணவர்களினதும் கோரிக்கை நியாயமானது. ★

## தமிழ் முஸ்லீம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரோத சக்திகளை தேடி நடவடிக்கைகளில் இறங்குவதும் கலவரங்களுக்கு காரணமாகின்றன. இதைப் பேரினவாத அரசு நன்கு பயன்படுத்தி வருகின்றது.

கிழக்கிலங்கையின் தமிழ் முஸ்லீம் மக்கள் ஒரே பிரதேசத்தில் வாழ்பவர்கள் ஒரே மொழியைப் பேசுபவர்கள், ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழக்கூடிய சிறுபான்மையினர். இவர்களிடையே ஐக்கியமும் ஒற்றுமையும் நிலவினுல் அது தனக்கே ஆபத்து விளைவிக்கும் என்பதால் அரசும் அதன் ஆயுதப்படைகளும் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமைக்கு வேட்டு வைப்பதிலேயே சதா கவனம் செலுத்தி வருகின்றனர். எனவே கிழக்கிலங்கை தமிழ் முஸ்லீம் மக்கள் எதிர் காலத்தில் பேரினவாதத்தால் எழக்கூடிய பெரும் அபாயத்தை தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்து தம்மிடையிலான ஐக்கியத்தைக் குலையவிடாது பேணிப் பாதுகாப்பது அவசியம். எச் சந்தர்ப்பத்திலும் பின் இருந்து தூண்டப்படும் சகல கலவர முயற்சிகளையும் தடுத்து நிறுத்துவது இரு சமூக மக்களினதும் தலையாய கடமையாகும். இது கவனத்தில் கொள்ளப்படாவிடில் அழிவும் அனர்த்தமும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கே. ★

## முன்னுள் நீதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்கே தள்ளப்படுகின்றனர். எனவே அரசு பயங்கரவாதத்தை ஒழித்து வருகிறது என்று சொல்ல முடியாது. பிரிவினையைத் தூண்டி வளர்ப்பதற்கே ஒருநாளைக்கு இரண்டு கோடி ரூபா செலவிடுகிறது என்பதே உண்மையாகும், எனவே சிங்களமக்களின் பணம் பிரிவினையை வலுப்படுத்தவே பயன்படுகின்றது. இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற ஒரு கருத்தரங்கில் முன்னுள் நீதியரசர் ஒருவர் கூறியிருக்கிருர்.

## ரராணுவம் தயார்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மே இன்னும் இருக்கவிடப்பட்டுள்ளனர். ஒரு ராணுவத் தாக்குதலை எதிர்த்துச் சமாளிக்கக்கூடிய அளவிற்கு எவ்வித தயார்ப்படுத்தலுக்கும் ஆளாக்கப்படவில்லை.

இத்தகைய சூழலில் வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் இதுவரை பெற்ற கொடூர இழப்புகளுக்கு உரிய நிவாரணம் தேடிக்கொள்ளவும், எதிர்வரும் பாரிய தாக்குதல்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காத விதத்திலும் ஒரு இடைக்காலத் தீர்வுக்கான சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். அதன் அடிப்படையில் உறுதியான யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும். இடைக்காலத் தீர்வு என்பது சரணடைவது, முற்றிலும் விட்டுக் கொடுப்பது என்பதல்ல அர்த்தம். நியாயமானதும் தமிழ் மக்களின் கௌரவம், அபிலாசைகள் இழக்கப்படாத விதத்தில் பேச்சுவார்த்தையின்மூலம் அரசியல் தீர்வைக் காண முற்படுவதாகும். இதில் இளைஞர் இயக்கங்களும் தமிழர் கூட்டணியினரும் அரசியல் தீர்க்கதரிசனத்துடன் நடந்துகொள்வது அவசியமாகும்.

அதேவேளை இடைக்கால அரசியல்தீர்வு அவசியம் என்ற அடிப்படையில் ராணுவத் தயாரிப்பை உடன் நிறுத்து! அரசியல் தீர்வுக்கு வழிவகை செய்! என்ற சுலோகத்தை மையமாக வைத்து தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் அணிதிரண்டு கிளர்ந்தெழ வேண்டும். இதற்கு இளைஞர் இயக்கங்களும், அரசியல் கட்சிகளும், வெகுஜன அமைப்புகளும் வழி வகுத்துக்கொடுக்க வேண்டும். இன்றைய அரசியல் - ராணுவச் சூழ்நிலைகளில் பின்பற்றப்பட வேண்டிய சரியான தந்திரோபாய வழிமுறை இதுவென்றே நாம நம்புகின்ருேம்.

இடைக்காலத் தீர்வின் அடிப்படையில் போராடும் சக்திகள் சரியான வழிகளில் தம்மை மீள்நிலைப்படுத்தவும், தமிழ் மக்கள் இதுவரை கண்ட அழிவுகளைவிட பாரிய அளவில் இடம்பெறவுள்ள அழிவுகளைத் தடுத்துத் தம்மைப் பாதுகாக்கவும் இதைவிட வேறு வழி இருக்க முடியாது. ★

## அறிவித்தல்

கடந்த வருடத்தில் புதிய பூமிக்குச் செலுத்திய சந்தா எதிர்வரும் 1986 மார்கழியுடன் முடிவடைகிறது என்பதைத் தெரியப் படுத்துகின்ருேம். அடுத்த வருடச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி வேண்டுகின்ருேம்.

**சந்தா விபரம்**

1 வருடம் — ரூ. 40/-<br>
6 மாதங்கள் — 20/-<br>
(தபால் செலவு உட்பட)

நிர்வாகி,<br>
புதிய பூமி<br>
15/1. மின்சார நிலைய வீதி<br>
யாழ்ப்பாணம்.

## அரசின் பேரின....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டுமானுல் தமிழ்மக்களை வர்க்க ரீதியிலும், சாதி ரீதியிலும் அந்நியப்படுத்தி வைத்திருக்கும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடியே தீர வேண்டும். அவ்வாறு போராடுவதாலேயே தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் உளப்பூர்வமாக ஒன்றிணைக்க முடியும். அதுவே ஐக்கியத்தின் அடித்தளமாகவும் இருக்கமுடியும் என்று கூறினுர்.

சங்கானை நிச்சாமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் க. தணிகாசலம் பேசுகையில் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவந்த சாதி அடக்குமுறைக்கு எதிரான 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி உருவாக்கிய போராட்டங்கள் தனியே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளை பெற்றுத் தந்த அதேவேளை தமிழர் மத்தியில் பகிரங்கமாக இருந்து வந்த பிளவையும் ஓரளவிற்குத்தானும் குறைப்பதற்கு வழிவகுத்தது என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. இன்றைய ஓரளவான தமிழர்களின் ஐக்கியம் என்று கூறுவதற்குக்கூட அன்றைய போராட்டங்களே அடிப்படையாக அமைந்தன.

எனவே சாதிவெறியாக இருப்பினும், இனவெறியாக இருப்பினும் அதனுல் அடக்கப்படும் மக்கள் வெறிக்கு எதிராக வெறித்தனப் போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி பெற முடியாது என்பதை வரலாறு எடுத்துக்காட்டி வருகின்றது. எனவே நீதிக்கும் நியாயத்திற்குமான போராட்டம் சரியான பாதையில் முன்னேறியே வெற்றிபெற வேண்டும்.

சில்லாலை சாந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் என். இரவீந்திரன் பேசுகையில் உலகின் பல்வேறுபட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் முகம்கொடுத்து முன்னேறி வந்துள்ளார்கள். தமிழர்களிடையே கொடிய அடக்குமுறையாக இருந்துவந்த சாதி அடக்கு முறைகளை அவற்ருல் பாதிக்கப்பட்ட மக்களே துணிந்து எதிர்த்துப் போரிட்டே முறியடித்தார்கள். இதில் முக்கியமானது என்னவெனில் கம்யூனிஸ்டுக்கள் தமது இயல்பான துணிவுடனும், வீரத்துடனும் சரியான கொள்கையுடனும் தலைமை கொடுத்து வழிகாட்டியதேயாகும். அதனுலேயே இன்றைய பேரினவாத அடக்குமுறையை சரியான வழிகளில் எதிர்க்க சரியான கொள்கை வழிகாட்டலும் தலைமையும் அவசியமாகும்.

வறுத்தலைவிளான் மலவத்தையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் டொன் பொஸ்கோ உரையாற்றுகையில், அடக்குமுறைகள் பல வடிவங்களில் மக்களுக்கு எதிராக ஏவப்படும்போது அடக்கப்படும் மக்களிடையே அவற்றுக்கு எதிரான எதிர்ப்புணர்வும் போராட்டமும் வெடித்தெழுவது இயல்பானதானதேயாகும். இங்கே முக்கியமானது என்னவெனில் மக்களின் எதிர்ப்புக்கும் போராட்ட உணர்வுக்கும் ஏற்ற சரியான கொள்கைகளை உருவாக்கி ஸ்தாபன ரீதியிலும், வர்க்க ரீதியிலும் ஒழுங்குபடுத்தி முன்னெடுப்பதேயாகும். அந்த வகையிலே 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதைத் தொடர்ந்த போராட்டங்களும் சாதி அடக்குமுறைக்கு மட்டுமன்றி இன அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கும் சிறந்த முன் உதாரணமாகும். ★

யாழ்ப்பாணம் 15/1, மின்சார நிலைய வீதியில் வசிக்கும் திரு. அ. சுப்பிரமணியம் அவர்களால், 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1986 கார்த்திகை 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.